
# பௌத்தம்: ஒரு சமயம்
# BUDDHISM AS A RELIGION




Srikanthaluxumy. A
11/21, Inuvil West
Chunnakam

# பவுத்தம்: ஒரு சமயம்
## BUDDHISM AS A RELIGION

ஆங்கில மூலம்
Dr. K. ஸ்ரீ தம்மானந்தா நாயக மகா தேரர்
J.S.m., Ph.D., D.Litt.

தமிழாக்கம்
V.குமாரசாமி

In Memory of



18th March 1918 -31st August 2006

VEN. DR. KIRINDE SRI DHAMMANANDANAYAKA
MAHA THERA

Former Chief High Priest of Malaysia and Singapore

Sponsored By :

SASANA ABHIWURDHI WARDHANA SOCIETY

Buddhist Maha Vihara

123, Jalan Berhala, Brickfields,

50470 Kuala Lumpur, MALAYSIA.

Tel : 603-22741141 Fax : 603-22732570

E-Mail : info@buddhistmahavihara.com

Website : www.buddhistmahavihara.com

www.ksridhammananda.com

வணக்கத்திற்குரிய

# Dr.K. ஸ்ரீ தம்மானந்த நாயக மகா தேரா

**J.S.M., Ph.D., D.Lit.**

Dr.K. ஸ்ரீ தம்மானந்த பௌத்த உலகில் அனைத்து வீடுகளிலும் அறிந்த ஒரு பெயராகும். பௌத்த மகாவிகாரத்தின் பொறுப்பேற்றிருந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, எண்ணற்ற அன்பர்களுக்கு புத்தரின் போதனைகளை வணக்கத்திற்குரிய இவர் வழங்கியிராது போனால், அவர்களுக்கு அதியுன்னத மெய்யொளிப் பேறெய்திய புத்தரின் விழுமிய செய்தி கிட்டியிராது.

தமது சொற்பொழிவுகளைத் தவிரவும், 'தம்ம பதம்' எனும் பேரிலக்கியம் முதல் சின்னஞ்சிறு ஐந்து பக்கத்து இதழ்கள் வரையிலான பல்வேறு வெளியீடுகளின் வாயிலாக, இன்னும் பரந்த அளவிலான நேயர்களை அவர் சென்றடைய முடிந்துள்ளது. புலமைமிக்க அறிஞர்களான பிக்குகள் முதல் இளம் பள்ளி சிறார்கள் வரை எல்லா மட்டத்தில் உள்ளவர்களையும் அவர் சென்றடைந்துள்ளார். இந்த தொன்மையான போதனைக்கு தற்காலத்திற்குகந்த ஏற்புடைமையைத் தரவும், இவ் விழுமிய போதனை காலங்கடந்த ஒன்று என்பதுடன், காலம், இடம், இனம், பண்பாடு மற்றும் சமய நம்பிக்கைகள் ஆகியவற்றின் வரம்புகளையும் ஊடறுத்துச் செல்லவல்ல ஒரு பொருள் கொண்டதாக உள்ளது என்பதைக் காட்டவும், அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அக்கறையே அவரது தம்ம விளக்கவுரைக்கான அணுகுமுறையை முற்றாக ஆட்கொண்டிருந்தது.

சாசன அபிவிருத்தி வர்த்தக சங்கம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இத் தருணத்தில் மிகுந்த வணக்கத்திற்குரிய நாயக மகா தேரரின் பேரறிவிற்கும் பெருங்கருணைக்கும் தகுதிவாய்ந்த கவுரவிப்பு மற்றும் எல்லா உயிர்களின் நலனுக்காகவும் இந் நூலை வெளியிடுவதாகும்.

# பவுத்தம்: ஒரு சமயம்

வணக்கத்திற்குரிய அறவனடிகள்

## Dr. K. ஸ்ரீ தம்மானந்தா

உலகில் ஏற்கனவே எத்தனையோ மதங்கள் இருக்கும் போது, பௌத்தம் என்ற இன்னொரு சமயமும் நமக்கு இருக்க வேண்டிய அவசியம் என்ன? மற்ற சமயங்களில் இல்லாத ஏதேனும் அபூர்வமான பண்புக்கூறு, அல்லது பங்களிப்பு, அல்லது தனிச்சிறப்புவாய்ந்த அம்சம் பௌத்தத்தில் இருக்கிறதா?

எல்லாச் சமயங்களும் அடிப்படையில் ஒன்றே என்று கூறும் சிந்தனை மரபு பொதுவாக இருந்து வருகிறது. முக்கியமான வேறுபாடுகள் எதுவுமில்லை. பொருள் கொள்வதிலும் கடைப்பபடிப்பதிலும் மட்டும் தான் வேறுபாடு. எப்படியாயினும் முடிவான பகுப்பாய்வில் நாம் யாவருமே சொர்க்கத்திலோ, அல்லது நரகத்திலோ தான் சென்று முடிவோம். இதுவே பெரும்பாலான சமயங்களின் பொதுவான நம்பிக்கை. பௌத்தம் இந்த பார்வைக் கோணத்தைப் பகிர்ந்து கொள்கின்றதா? இந்த வினாவுக்கு விடை காண நாம் சமயம் என்றால் என்ன என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

சமயத்தை ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக நோக்கும் கல்வித்துறை ஆய்வில், ‘சமயம்’ என்ற சொல் அதன் பல்வேறு கூறுகளாக - ஓர் அகமுக அனுபவமாக, இறைமையியல் ஆய்வாக யான் அல்லது அறிவுசார்ந்த கோட்பாடுகளின் உருவாக்கமாக, நீதிநெறிகளின் ஆதாரம் அல்லது பிறப்பிடமாக, மற்றும் பண்பாட்டின் ஓர் அங்கமாக - சிந்திக்கப்படலாம்.

இதன் இயல்பு குறித்தும், பொருள் குறித்தும், வெவ்வேறு அறிஞர்கள் வெவ்வேறு கண்ணோட்டங்களையும் கருத்துக்களையும் வழங்கியுள்ளனர். **அல்டஸ் ஹக்ஸ்லி** என்பவரின் கருத்துப்படி, “சமயம் என்பது, அதன் பல்வேறு பொருள்களுக்கிடையே, ஒரு கல்வி முறைமை (System)

என்பதாகிறது. இம்முறைமையைக் கொண்டு முதலாவதாக, தங்கள் சொந்த ஆளுமையிலும் சமுதாயத்திலும் விரும்பத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரவும், இரண்டாவதாக, தங்கள் விழிப்புணர்வை மேம்படுத்தி தங்ளுக்கும், தாங்கள் அங்கமாகும் பிரபஞ்சத்துக்கும் இடையில் போதுமான உறவு முறைகளை நிலைநாட்டிக் கொள்ளவும் மனிதர்கள் தங்களைத் தாங்களே பயிற்றுவித்துக் கொள்ளலாம்.''

டாக்டர் இராதாகிருட்டிணன் போன்ற இக்கால இந்தியத் தத்துவமேதைகள், 'சமயம் என்பது கோட்பாடுகளின் ஒரு தொகுப்பானது; அது ஓர் அனுபவம்' எனும் கருத்தை விரித்துரைத்துள்ளனர். மேலும், சமய அனுபவம் என்பது 'மனிதனில் உள்ள தெய்வீக சாந்நித்தியத்தை' உணர்வதை அடிப்படையாகக் கொண்டது என்றும் **எச்.ஜி.வெல்ஸ்** கூற்றுப்படி, 'சமயம் என்பது நமது ஒழுக்க நடத்தையை நிர்ணயிக்கும் நம் கல்வியின் மையப்பகுதி' என்றும், காந்த் எனும் ஜெர்மானிய தத்துவமேதை, 'நம் ஒழுக்க நெறிக் கொள்கைகளை மீற முடியாத விதிகளாகக் கண்டு கொள்வதே சமயம்' என்றும் கூறுகிறார்கள்.

**சமய நெறிசார்ந்த வாழ்க்கையாக புத்தர் கூறும் செய்தியாவது: 'தீய செயல்களை விட்டு விலகி இருத்தல் நற்செயல்களால் வாழ்வை வளப்படுத்தல், மற்றும் மனதை மாசுகளிலிருந்து தூய்மைப்படுத்தல்' என்பதாகும்.**

நம்முடைய நோக்கங்களுக்காக சமயம் என்பது ஒரு மிக விரிவான பொருளில் நீதிநெறி மற்றும் தத்துவ போதனைகளின் ஒரு தொகுப்பு என்பதோடு, அத்தகைய போதனைகளை உறுதியோடு ஏற்றுக் கொள்ளுவதுமே என வரையறுக்கலாம் இந்த அர்த்தத்தில் பௌத்தம் ஒரு சமயமே.

எனினும், முதலில் கூறப்பட்ட பொதுப்படையான வகையினங்களில் பௌத்தம் சரிவரப் பொருந்துவதில்லை. ஏனெனில், இருந்து வரும் பிற சமயங்களுடன் பல வழிகளில் பௌத்தம் பொதுவான கூறுகளைப் பெற்றிருக்கவில்லை. இதை மேலும் சிந்திப்பதற்கு நாம் முதலில் சமயம் எப்படித் தோன்றி யிருக்கக்கூடும் என்பதைச் சுருக்கமாக ஆராய்வோம்.

## தொடக்கம்

சமயம் தோன்றியது ஏன்? மனிதனின் அச்சம், ஐயப்பாடு, பாதுகாப்பின்மை இவற்றில் தான் சமயத்தின் பிறப்பிடம் உள்ளதென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அமைப்பொழுங்கு வாய்ந்த சமயங்கள் தோன்றுவதற்கு முற்பட்ட நாட்களில், மக்களுக்குப் போதிய அறிவு இல்லை. இந்த வாழ்க்கையின் உண்மையான இயல்பையும், மரணத்திற்குப் பின் அவர்களுக்கு என்ன நடக்குமென்பதையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இயற்கைத் தோற்றங்களுக்கும், இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் உள்ள காரணங்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களது அளவான அறிவு விளக்கத்திற்கேற்ப, இந்த மகிழ்ச்சியானதும், மகிழ்ச்சியற்றதுமான அனைத்தையும் உண்டாக்க, புலப்படாத சில சக்திகள் இருக்க வேண்டுமென்று அவர்கள் சந்தேகித்தனர். இறுதியாக, இயற்கையின் இந்த வலிமைகளுக்குப் பின்னால் ஒரு ஆற்றல் இருக்கிறது என்பதை உணரத் தலைப்பட்டனர். அவர்கள் அந்த ஆற்றலை 'சக்தி' என்றழைத்தனர். இவ்வாற்றல்கள் தங்களுக்கு எவ்வகையிலாவது தீங்கிழைக்கக்கூடும் என்றுணர்ந்த அவர்கள் அவற்றின் பேரில் விளக்க முடியாத ஒரு வியப்பும், அச்சமும் கலந்த உணர்வை அனுபவித்தனர். எனவே, தம்மைப் பாதுகாக்க அல்லது குறைந்த பட்சம் தொந்தரவு செய்யாது விட்டுவிட, அந்த சக்திகளை அவசியம் அமைதிப்படுத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென உணர்ந்தனர். இந்தச் சக்திகளுடன் சாதாரண மொழியில் பேசுவதற்கான தங்களுடைய திறமையை நம்பாமல், அவர்கள் தங்கள் தகவல்களை சைகைகள் மூலம் தெரிவிப்பதே பயன் தருவதாக இருக்கும் என்று கருதினர். இறுதியாக இச் சக்திகளின் சகாயத்தைப் பெறுவதற்காக மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள் வழிபாடுகள் வடிவிலான சடங்குகளாகிவிட்டன. இந்தச் சக்திகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும் சிறப்பான ஆற்றல் படைத்தவர்கள் என்று சில பேர் குறிப்பிடப்பட்டதோடு, அவர்கள் சமூகத்தில் பெருத்த அதிகாரத்தை அனுபவிக்கலாயினர்.

தங்களது வழிபாட்டிற்கும், பிரார்த்தனைக்கும் பிறகு, விருப்பமில்லாத சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியுமென்றும், அதே சமயம், கண்ணுக்குப் புலப்படாத இந்த வல்லமைகளும் ஆற்றல்களும் ஓரளவு பாதுகாப்பை உறுதிசெய்யுமென்றும் ஆதிமனிதர் எண்ணினர். தாம் தொடர்புகொள்ள முயலும் ஒன்றைச் சிறந்த முறையில் மனக்காட்சியாக்க உதவும்பொருட்டு, ஒவ்வொரு சக்திக்கும் அவர்கள் ஒரு பெயரையும், ஒரு வடிவத்தையும் கொடுத்தனர். ஒரு மனித வடிவமாகவோ, அல்லது விநோதமான மனிதரல்லாத ஒரு வடிவமாகவோ உருவகித்தனர். காலப்போக்கில், அவர்கள் இவ்வுருவகிப்புக்களின் தொடக்க கால முக்கியத்துவத்தை மறந்துவிட்டனர். அவற்றை உண்மையென்றே எடுத்துக் கொண்டு, இறுதியில் அவற்றையே தெய்வங்களாக ஏற்றுக்கொண்டனர்.

சிந்தனைகளையும், கருத்தாக்கங்களையும், வெவ்வேறு பண்பாடுகள் பரு வடிவங்களாக உருமாற்றி, அந்த வடிவங்களைத் தெய்வங்களாக மதிக்கவும், வழிபாடு செய்யவும் குறிப்பிட்ட சடங்குகளை உண்டாக்கினர். பிற்காலத்தில், துவக்ககால நகர்ப்புற குடியிருப்புகள் தோன்றி சமுதாயக் கட்டுப்பாடுகள் அவசியமாகி விட்டதும் ஒழுக்கநெறி நடத்தையை மேம்படுத்தவும், சமுதாயத்தின் நல்வாழ்வை உறுதிசெய்ய குடிமக்களைச் சரியான வழியில் வழிநடத்தவும் சில பழக்கங்கள் அடித்தளங்களாகப் பயன்படுத்தப் பட்டன. இவ்வாறாகவே மனிதாபிமானம், மனிதப் பொறுப்புகள் மற்றும் நேர்மை, அன்பு, பரிவு, பொறுமை, சகிப்புத்தன்மை, வழிபாடு (devotion), ஒற்றுமை, இணக்கம் ஆகிய மதிப்புவாய்ந்த மனிதப் பண்புகள் போன்ற கருத்தாக்கங்கள் வளர்ச்சியடைந்தன. இந்தப் பண்புகள் மேலும் மேம்பாடடைவதை உறுதி செய்யும் பொருட்டு நம்பிக்கை கொண்டவர்களிடம் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதத்தில் நடந்துகொள்ளாவிட்டால் கடவுள் அவர்களை அடுத்த பிறவியில் தண்டிப்பார் என்று பயமுறுத்தி தலைவர்கள் அச்சத்தைத் திணித்தனர். நல்லொழுக்க நடத்தையும், மீறிய-இயற்கையின் (supernatural) மீதான நம்பிக்கையும் பிணைந்ததால் வந்த விளைவே சமயம் தோன்ற காரணமாகியது. நல்லொழுக்கம் பற்றி விரிவாகப் பின்னர் விவாதிப்போம்.

## கடவுள் என்னும் கருத்தாக்கம்

கற்பனையும், மனிதாபிமானமும் ஒன்று சேர்ந்து பிணைந்து இறுதியில் சமயம் உண்டானது இப்படித்தான். எந்தக் கடவுளும் சமயத்தை உண்டாக்கியதாக நம்பக் கடினமாக இருக்கிறதென்று சிலர் கூறுகின்றனர். மனிதனே சமயத்தை உண்டாக்கி, பின்னர் கடவுள் என்ற கருத்தாக்கத்தை சமயத்தினுள் புகுத்தியுள்ளான் என்று வேண்டுமானாலும் நாம் கூறலாம். பேராசிரியர் **ஒய்ட்ஹெட்** என்ற அமெரிக்க தத்துவமேதை, 'முதன்முதலில் மனிதன் கடவுளைப் படைத்து, பின்பு கடவுள் மனிதனைப் படைத்தார்' என்று ஒரு சமயம் கூறியுள்ளார். 'கடவுள்' என்ற கருத்து முதலில் மனிதனால் உண்டாக்கப்பட்டு, பின்பு இந்தக் கருத்து இறைமையியலாக (divinity) உருமாறியது என்பதே அவரது கூற்றின் பொருள். மற்றொரு புறம், **அனடோல் ஃபிரான்சு** எனும் பிரெஞ்சு தத்துவ அறிஞர், 'கடவுள் என்ற கருத்தாக்கம் இல்லாதிருந்திருந்தாலும், ஏதாவதொரு வழியில், மனிதன் ஒன்றை உண்டாக்கி இருப்பான். ஏனென்றால், அவனது மனதிற்கு அது மிகவும் இன்றியமையாத ஒன்று' என்று கூறுகிறார். நமது உள்ளார்ந்த அச்சம், கவலைகள், தொல்லைகள், பதட்டம், பேரவா ஆகியவற்றை அடக்கிவைக்க ஒரு தெய்வீக சக்தி தேவைப்படுகிறது. பிரச்சினைகளைத் தவிர்த்து, நமக்கு ஆறுதல் தர நாம் ஒரு வெளிச்சக்தியைச் சார்ந்திருக்கிறோம். எனவே தான் மனித இனத்தின் இயல்பை அறிந்த **அனடோல் ஃபிரான்சு**, 'ஒரு கடவுள் இல்லாதிருந்திருந்தால் நாமே ஒன்றைப் படைக்க வேண்டி இருக்கும்' என்று கூறியுள்ளார்.

இந்தக் கருத்தின்படி நாம் சிறு பிள்ளைகள் போலவே இருக்கிறோம். ஒரு குழந்தை அழுதுகொண்டிருக்க, தாய் அதைத் தூக்கி வைத்திருக்க முடியாமல் வேலையாக இருக்கும் பொழுது அதை அமைதிப்படுத்த அதன் வாயில் ரப்பர் சூப்பானை வைக்கிறாள். அது அந்தக் குழந்தையின் அழுகையை நிறுத்தும். கடவுள் எனும் கருத்து பலருக்கு இவ்வாறு உதவுகிறது. தங்கள் கவலைகளைத் தவிர்க்கவும், கண்ணீரை துடைக்கவும் அவர்கள் சமய நம்பிக்கைகள், நடவடிக்கைகள் வடிவில் பல்வேறு சாந்தி முறைகளை உருவாக்கியுள்ளனர்.

## புத்தர்

இத்தகைய ஒரு சமய சூழ்நிலையில்தான் புத்தர் தோன்றினார். சுகபோகத்தில் வாழ்ந்த ஒரு இளவரசர் என்ற முறையில், அவர் இவ்வுலகில் உயிர்கள் ஏன் துன்பப்படுகின்றன என்பது பற்றி மிக ஆழமாக சிந்திக்கத் தலைப்பட்டார். இந்தத் துன்பத்தின் காரணம் என்ன? என்று கேள்வி எழுப்பினார். ஒரு நாள், ஒரு இளஞ் சிறுவனாக ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த போது, திடீரெனத் தென்பட்ட ஒரு பாம்பு ஒரு தவளையைப் பிடித்ததை அவர் கண்டார். பாம்பும், தவளையும் போராடிக் கொண்டிருந்த போது, விண்ணிலிருந்து ஒரு பருந்து பாய்ந்து வந்து, பாம்பின் வாயில் தவளை இருந்தபடியே, அந்தப் பாம்பைத் தூக்கிச் சென்றது. இந்த நிகழ்ச்சியே அந்த அரசிளங்குமரன் உலகியல் வாழ்வைத் துறப்பதற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. நீரிலும், நிலத்திலும் வாழும் உயிர்கள் எப்படி ஒன்றையொன்று கொன்று உயிர் வாழுகின்றன என்பது பற்றி அவர் சிந்திக்கத் தலைப்பட்டார். ஓர் உயிரினம் பிடிக்கப் பார்க்கிறது; மற்றொன்று தப்ப முயல்கிறது. உலகம் உள்ளளவும் இந்த முடிவற்ற போர் தொடரத் தான் செய்யும். இந்த முடிவில்லாத வேட்டையாடும் நடவடிக்கையும், தற்காப்பு நடவடிக்கையுமே நம் மகிழ்வின்மையின் அடிப்படை. இதுவே எல்லாத் துன்பங்களுக்கும் பிறப்பிடம். இந்தத் துன்பத்திற்கு முடிவு காண்பதற்கான வழியைத் தான் கண்டறிய வேண்டுமென அந்த இளவரசர் தீர்மானித்தார்.

## துறவு

பல்வேறு சமய ஆசிரியர்களிடம் பயின்று அவர்கள் கற்பித்த அனைத்தையும் அவர் கற்றுக்கொண்டார். எனினும், துன்பத்துக்கு முடிவுகட்டும் வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தக் கேள்வியைச் சிந்தித்தவாறே பல ஆண்டுகளைக் கழித்தார். இறுதியாக, இருபத்தொன்பது வயதில், பிணி, மூப்பு, சாக்காடு, துறவுவழி மற்றும் வீடுபேறு ஆகியன பற்றி தீவிரமாகச் சிந்தித்த அவர் தமது உலகியல் ஈடுபாடுகளையும், பொறுப்புகளையும், சுகபோகங்களையும் விட்டொழித்தாலன்றி விடை காண்பது

இயலாதென்று முடிவுசெய்தார். இதன் காரணமாகவே அவர் தமது 'மாபெரும் துறவு' மூலம் அரண்மனையை விட்டகன்றார். ஆன்மீக முன்னேற்றத்திற்காகப் பண்படுதலும், போராடுதலுமாக இருந்த முடிவில்லாத வாழ்க்கைச் சுழற்சிகளின் உச்சகட்டமாகத் திகழ்ந்த ஆறாண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு, அவர் இறுதியாக மெய்யொளிப்பேறு எய்தினார். நம்முடைய துக்கத்தின் காரணத்தை புரிந்து கொண்டார். இதுவே மற்றொரு 'சமய அமைப்புமுறை'யின் துவக்கமானது. ஆனால், அதைப் போல அதற்கு முன்பு யாரும் அறிந்திராததாக அச்சமயம் இருந்தது. உண்மையில் இன்று பல பேர் பௌத்தத்தை ஒரு சமயம் என்று கூட அழைக்க விரும்புவதில்லை; ஏனெனில், 'சமயம்' என்ற சொல் அவர்கள் மனதில் ஏராளமான எதிர்மறை மனவெழுச்சிகளை உசுப்பி விடுகிறது.

## பழங்கால இந்தியாவின் நம்பிக்கைகளும் பழக்கங்களும்

மற்றுமொரு மதத்தை அறிமுகம் செய்வதற்கான காரணமே புத்தருக்கு அப்போது இருக்கவில்லை. ஏனென்றால் 2600 ஆண்டுகளுக்கு முந்திய அந்த காலகட்டத்தில், இந்தியாவில் மட்டுமே 62 சமயங்கள் ஏற்கனவே இருந்துவந்தன. அவரது காலத்து சமயங்களால் அவரது வினாக்களுக்கு விடையளிக்க இயலாது போய்விட்டதால் அவர் தாமே சிந்தித்து உணர்ந்தவற்றை அறிமுகம் செய்துவைக்க அந்தச் சமயங்களின் உள்ளடக்கங்களையோ, கருத்தாக்கங்களையோ பயன்படுத்துவதில்லை என்று முடிவு செய்தார்.

அந்தக் காலத்து இந்தியாவின் சமயச் சிந்தனை என்னவாக இருந்தது? கடவுள் ஒவ்வொருவரையும் உண்டாக்குகிறார். கடவுளே எல்லாவற்றுக்கும் பொறுப்பு; கடவுள் வரம் தருவார். கடவுள் நம் பாவங்களை எல்லாம் மன்னிப்பார்; கடவுளே நம் மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கைக்குப் பொறுப்பு; கடவுள் நம்மை சொர்க்கத்துக்கோ, நரகத்துக்கோ அனுப்பி வைப்பார்; இவை தாம் இன்று கூட எல்லாச் சமயங்களினதும் அடிப்படை உள்ளடக்கமாக இருந்து வருகிறது.

அதே காலத்தில் வேறு சில சமயங்களும் இருந்தன. அவை தங்களது எல்லாத் தீவினைகளையும் தங்கள் வாழ் நாளிலேயே கழுவிப் போக்கிவிட முடியும் என்றும், அதனால் மரணத்திற்குப் பிறகு சொர்க்கத்துக்குப் போய்விடலாம் என்றும் எண்ணிக்கொண்டு நம்பிக்கையுள்ளவர்கள் அதற்குத் தங்கள் பரு உடலைச் சித்திரவதை செய்ய வேண்டியது அவசியம் என்று போதித்தன. மற்றுமொரு சமய பிரிவு தெய்வங்களை மகிழ்விக்க சமய சடங்குகள், கிரியைகள், வழிபாடுகள் மற்றும் உயிர்ப் பலிகளை ஊக்குவித்தது. இந்தச் செயல்முறைகள் மூலமாகத் தாங்கள் சொர்க்கத்துக்கு போய்விட முடியுமென இந்தப் பிரிவினர் நம்பினர். வேறு சிலர் பிரார்த்தனைகளையும், வழிபாடுகளையும் புகுத்தி, தாங்கள் செய்துவிட்ட தீவினைகளுக்கு மன்னிப்புக் கோரினர். இந்தப் பழக்கங்கள் அனைத்தினது பயனுடையமையையும் புத்தர் ஒப்புக்கொள்ளவில்லை.

## புத்தர் ஏதேனும் வாக்குறுதி அளித்தாரா?

புத்தர் தம்மை பின்பற்றுவோர் என்று கூறி கொண்டவர் களுக்கு சொர்க்க சுகமோ, வெகுமதியோ கிடைக்குமென்று வாக்குறுதியளிக்கவில்லை. அன்றி தம் பேரில் நம்பிக்கை வைத்தவர்களுக்கு கடைத்தேற்றம் கிடைக்குமென்றும் வாக்குறுதி தரவில்லை. அவரைப் பொறுத்தவரை சமயம் என்பது பேரம் பேசுவதல்ல; அது மெய்யொளிப்பேற்றையும் கடைத்தேற்றத்தையும் அடைவதற்கான ஒரு மேன்மைவாய்ந்த அரிய வாழ்க்கை நெறி. மக்கள் சிந்தித்துப் பார்த்து விளங்கி கொள்வதையே அவர் விரும்பினார். மனித நேயமும், நீதியும், அமைதியும் பேரரசு புரியுமொரு மேன்மைவாய்ந்த அரிய வாழ்க்கை நெறியே பௌத்தம். பழிவாங்கத் துடித்தல், பகைமை பாராட்டல், கண்டனம் செய்தல் மற்றும் கடுஞ்சினம் கொள்ளல் இவை யாவும் இப்போதனைகளுக்கு அயலானவை.

சமயத்தின் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக எழுந்த பகுத்தறிவுப் புரட்சிக்காக உலகம் புத்தருக்கு கடமைப் பட்டிருக்கிறது. பூசாரிகளின் அடிமைப் பிடியிலிருந்து மனிதனை

விடுவித்தவர் அவர் தான். கபடத்தனம் மற்றும் சமயச் சர்வாதிகாரம் இவற்றின் சூழ்ச்சிகளிலிருந்து மனிதனை விடுவிப்பதற்கு முதன் முதலில் வழிகாட்டியவர் இவரே.

புத்தருடைய காலத்தில் சடங்குகள், கிரியைகள், கடவுளருக்கு உயிர்ப்பலியிடல் ஆகியவற்றை விட, எந்தச் சமயப் பயிற்சியும் உயர்வானதாகக் கருதப்படவில்லை. ஆனால், புத்தரை பொறுத்தவரை இவற்றைவிட மிகுதியாகக் கேவலப்படுத்து வதாகவோ, இழிவுபடுத்துவதாகவோ மனிதனுக்கு வேறெந்த பழக்கமும் இருக்கமுடியாது. பலிகொடுத்தல் என்பது லஞ்சம் கொடுப்பதைத் தவிர வேறொன்றுமில்லை. லஞ்சத்தாலும் ஊழலாலும் பெறும் கடைத்தேற்றமானது, எந்தவொரு தன்மானமுள்ள மனிதனும் அடைய விரும்பும் கடைத்தேற்றமாகாது.

## சமயக் கலைச்சொல்லியல்

ஆனால், புத்தர் தமது கோட்பாட்டை அறிமுகம் செய்ய அன்றைய இந்தியாவில் வழக்கில் இருந்துவந்த சமயக் கலைச் சொற்களையே பயன்படுத்தினார். ஏனென்றால், அப்படிச் செய்தால் தான் தம் பேச்சைச் செவிமடுப்பவர்களோடு பழக்கப்பட்ட களத்தில் அவரால் இருக்க முடியும். அவர்களால் அவர் சுட்டிக் காட்டுவதை கிரகித்துக் கொள்ள முடியும். அதன் பிறகே அந்தப் பொதுக் களத்திலிருந்து அவர் தம் சொந்தக் கருத்துக்களை மேற்கொண்டு வளர்த்துச் செல்ல முடியும்.

தர்மம், கர்மம், நிர்வாணம், மோட்சம், நரகம், சம்சாரம், ஆத்மா என்பன அவரது காலத்தில் எல்லாச் சமயப் பிரிவினருக்கும் பொதுவாக இருந்துவந்த சில சொற்களாகும். ஆனால், புத்தர் தமது போதனையில் பழக்கத்திலிருந்த இந்தச் சமயச் சொற்களுக்கு மிகவும் பகுத்தறிவுக்கு உகந்ததாகவும், தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும் உள்ள பொருள்களையும், பொருள்கோள்களையும் வழங்கலானார்.

**தர்மம்**

எடுத்துக்காட்டாக தர்மம் (அல்லது தம்மம்) என்ற சொல்லைப் பார்ப்போம். 'தர்மம்' எனும் இந்தச் சொல்லுக்கு தொல்பழங்காலத்தில் வழங்கி வந்த பொருள் 'கடவுளால் வழங்கப்பட்ட ஒரு விதி' என்பதாகும். தொன்மையானதொரு நம்பிக்கைக்கு இணங்க, இந்த தர்மத்தைக் காப்பதற்காக அவ்வப்போது பல்வேறு அவதாரங்களை எடுத்து காட்சியளிப் பதாகக் கடவுள் வாக்குறுதி அளித்துள்ளார். கோட்பாடுகளையும், கட்டளைகளையும், சமயச் சட்டங்களையும் எந்தக் கடவுளும் கொடுத்திருக்க முடியுமென்பதை புத்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. புத்தர் தர்மம் எனும் சொல்லைத் தம்முடைய போதனை முழுமையையும் வருணிக்கப் பயன்படுத்தியுள்ளர். எது தாங்கு கிறதோ, எது ஆதரிக்கிறதோ அதுவே தர்மம்.

உயிர் வாழ்ந்திருப்பதால் உண்டாகும் துன்பத்திலிருந்து நாம் தப்பவும், நாம் மனித மேன்மையின் தரத்தைக் கெடுத்து விலங்கு உலகம், ஆவி, பூதம் அல்லது பிசாசுகளின் உலகம் போன்ற கீழ்நிலைகளுக்குத் தாழ்ந்து சென்றுவிடாமல் தடுக்கவுமே புத்தர் தர்மத்தைப் போதித்தார். புத்தர் அறிமுகப்படுத்திய தர்மம் நம்மைத் தாங்கி ஆதரித்து இந்த உலகங்களின் துயரங் களிலிருந்து நம்மை விடுவிக்கிறது. இதன் பொருளாவது அவர் பரிந்துரைக்கும் வழிகளைப் பின்பற்றினால் நாம் ஒரு போதும் குருடு, முடம், செவிடு, ஊமை அல்லது பைத்தியமாகப் பிறக்கும் துர்ப்பாக்கியமான நிலைகளுக்கு ஆளாக மாட்டோம் என்பது மாகும். எனவே, புத்தருடைய வழக்கில் தர்மம் என்பது துன்பத்திலிருந்து விடுபட்டிருப்பதற்கான நமது போராட்டத்திலும், அத்துடன் மனித நன்மதிப்புக்களைத் தரம் உயர்த்தி கொள்வதிலும் நம்மை ஆதரிப்பதற்கான அறிவுரைகளேயாகும். மேல்நாட்டு தத்துவ மேதைகள் பௌத்தத்தை ஒரு மேன்மையான வாழ்க்கை நெறியாக, அல்லது சுதந்திரமும், பகுத்தறிவும் வாய்ந்த ஒரு சமயமாக வர்ணிப்பர்.

தர்மம் என்பது யாரோருவரும் படைத்த, அல்லது வகுத்தளித்த ஓர் அபூர்வமான சட்டம் அல்ல. நம்முடைய

உடம்பே தர்மம் தான்; நம் மனமே தர்மம் தான்; இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே தர்மம் தான். இப்பருவுடலின் இயல்பையும், மனதின் இயல்பையும் மற்றும் உலகியல் நிலைமைகளின் இயல்பையும் புரிந்துகொள்வதன் மூலம் நாம் தர்மத்தை உணர்கிறோம். நம்முடைய இருப்பின் இயல்பை பகுத்தறிவு பூர்வமாக மெய்ம்மை சார்ந்த வழியில் உள்ளது உள்ளவாறு விளங்கிக் கொள்ளவே புத்தர் நமக்கு போதித்துள்ளார். அப்போதனை இங்கே இப்பொழுதே இருக்கும் ஒவ்வொரு உணர்வார்ந்த உயிரின் வாழ்க்கையையும் அதன்வழி ஒன்றுக்கொன்று தொடர்புடைய வகையில், அனைத்து உள் பொருட்களின் (existance) வாழ்க்கையையும் பற்றியதாக இருக்கிறது.

சமயத்தைப் பற்றி மக்கள் பேசிக் கொள்ளும் போது ‘உங்கள் நம்பிக்கை (faith) என்ன?’ என்று கேட்பது வழக்கமாக உள்ளது. அவர்கள் ‘நம்பிக்கை’ என்ற சொல்லை இங்கே பயன்படுத்துகின்றனர். ஒருவரது சமயத்துறை மேம்பாட்டின் தொடக்க காலத்தில் ‘நம்பிக்கை’ என்பது பயனுள்ள ஒன்றாக இருக்கக்கூடும் என்றாலும், முழுமையானதொரு பொருளில் சொல்வதானால், ‘நம்பிக்கையை’ வளர்க்க புத்தர் ஆர்வம் கொள்ளவே இல்லை. பகுப்பாய்வினால் விளைந்த அறிவு இல்லாமல் நம்பிக்கையை மட்டும் சார்ந்திருப்பதில் உள்ள ஆபத்து என்னவென்றால் அது நம்மை சமய வெறியர்களாக்கிவிடக்கூடும் என்பதே. தங்கள் மனதில் நம்பிக்கையை உறைந்து விட அனுமதிப்பவர்கள் பிறருடைய கண்ணோட்டத்தை உணர முடியாது; ஏனென்றால், தாங்கள் நம்புவதே உண்மை என்று அவர்கள் ஏற்கனவே முடிவுகட்டிவிட்டார்கள். புத்தர் தம் சொந்த போதனைகளைக் கூட நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றே வலியுறுத்தினர். ஒருவர் அறிவைப் பெறவேண்டும்; அதன்பின் ஆய்வு, விவாதம், தியானம் மற்றும் இறுதியாக சமாதி இவற்றின் மூலமாக விளக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். செய்திகள் பற்றிய அறிவு என்பது ஒன்று; விளக்கம் என்பது வேறொன்று. விளக்கம் இருந்தால் ஒருவர் தமக்குள்ள

அறிவை அடிப்படையாகக் கொண்டு மாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளுக்கேற்ப தமது வாழ்க்கையைச் சரிப்படுத்திக் கொள்ள முடியும். பல செய்திகள் தெரிந்த சில கல்வியறிஞர்களை நாம் சந்தித்திருக்கலாம். அவர்கள் தங்களது அகந்தை, தன்னலம், கோபம், வெறுப்பு இவற்றின் காரணமாக உண்மை நடப்பை மதிப்பவர்களாக (realistic) இருப்பதில்லை. இப்பண்புகள் அவர்களை நடுநிலையான மனப்பான்மைகளையும், மன அமைதியையும் அடையவிடுவதில்லை. விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பொழுது எப்படி சகித்துக் கொளவது என்று நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். உறுதியாக நிற்க வேண்டிய அவசியம் ஏற்படும் பொழுது நாம் தன்மதிப்போடு உறுதியாக இருக்க வேண்டும்.

**கர்மம்**

மற்றொரு எடுத்துக்காட்டாக 'கர்மம்' (அல்லது கம்மா) எனும் சொல்லை எடுத்துக் கொள்வோம். 'செயல்' என்பதே அதன் பொருள். ஒருவர் ஒரு தீச்செயலைச் செய்துவிட்டால் அதன் தீய விளைவிலிருந்து அவரால் தப்பவே முடியாது. ஏதாவதொரு வழியில் தொடரப் போகும் விளைவுகளை அவர் எதிர்கொண்டே ஆக வேண்டும். இந்தக் கர்மாவின் விளைவை இயக்கிவைப்பதற்கு ஒரு கடவுள் உண்டெனபது பழமையான நம்பிக்கை. தீய வினைகளுக்கேற்ப கடவுள் தண்டிக்கிறார்; நல்ல வினைகளுககேற்ப வெகுமதியளிக்கிறார். புத்தர் இந்த நம்பிக்கையை ஏற்கவில்லை. பலன்களின் செயல்பாடுகளை இயக்குகின்ற வேறு யாரோ, அல்லது எந்தவொரு சக்தியோ இருக்க வில்லை என்றே அவர் கூறினார். காரணகாரிய விதியின் நடுநிலையான செயல்பாடுகளாக, கர்மாவே பலனைத் தருகிறது. நாம் அறிவோடு செயல்பட்டால் கர்ம பலனைத் தவிர்க்கவும், சில நிலைகளில் வெற்றிக் கொள்ளவும் கூட முடியுமென்று அவர் கூறுகிறார். ஒரு வேளை தீய கர்மா செய்துவிட்டால், அதற்கு மேல் எந்த நன்னம்பிக்கையும் இருக்க முடியாது என்று எண்ணி விதிவசத்தின் பேரில் நாம் ஒரு போதும் நம்மை நாமே ஒப்படைத்துவிடக்கூடாது என்று அவர் கூறுகிறார். வழிபாடு செய்தும், பிரார்த்தனை பண்ணியும், பலிகொடுத்தும் வந்தால்,

கடவுள் கர்மாவின் பலன்களை இல்லாததாக்கிவிட முடியுமென்று பிற சமயங்கள் போதிக்கின்றன. ஆனால், நம்முடைய சொந்த உழைப்பினாலும், உள்ளத் தூய்மையினாலுமே நாம் நம்முடைய கடைத்தேற்றத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்று புத்தர் போதிக்கின்றார்.

'என்ன செய்ய வேண்டுமென்று புத்தரால் உனக்குச் சொல்ல முடியும்; ஆனால், அந்த வேலையை உனக்காக அவரால் செய்ய முடியாது'. கடைத்தேற்றுவதற்கான வேலையை நீயே செய்து கொள்ள வேண்டும். கடைத்தேற்றுவதற்காக வழிகாட்டுவதைத் தவிர யாரும் மற்றொருவருக்கு வேறெதுவும் செய்துவிட முடியாது என்று புத்தர் தெளிவாகவே கூறியுள்ளார். ஆகவே, நாம் கடவுளை நம்பி இருக்கக்கூடாது; அதோடு புத்தரையும் கூட நம்பி இருக்கக் கூடாது. ஒரு மனிதராக இருப்பதில் உள்ள தன்மைகளையும், கடமைகளையும், பொறுப்புக்களையும் நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நாம் ஏதேனுமொரு தீய கர்மாவைச் செய்துவிட்டால், அதைச் சரிசெய்வதற்கான நம்முடைய முயற்சிகளில் முட்டுக் கட்டைகளோ, ஏமாற்றமோ ஏற்படுங்கால், அதன் காரணமாக நம்முடைய அரிய ஆற்றலை வீணடிக்கக்கூடாது.

முதலாவதாகச் செய்ய வேண்டியது, அத்தகைய தீய கர்மாவால் ஏற்படக்கூடிய தீமைகளை உணர்ந்து பார்த்து, மீண்டும் அதனைச் செய்யாதிருக்க ஒரு திடமான சூளுரையை மேற்கொள்வதாகும். இரண்டாவதாகச் செய்ய வேண்டுவது, மேலும் மேலும் அதிகமான நல்ல கர்மாக்களைப் பெருக்கிக் கொள்வ தாகும். மூன்றாவதாக, தீய எண்ணங்கள், சுயநலப் பண்பு, வெறுப்பு, கோபம், பொறாமை, காழ்ப்புணர்ச்சி, கெட்ட நோக்கம் ஆகியவற்றைக் குறைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்த வழியாக, நாம் செய்யும் தீய கர்மங்களின் கெட்ட விளைவுகளை நாம் குறைத்துக் கொள்ள முடியும். இதுதான் கெட்ட விளைவுகளிலிருந்து வெற்றிகொள்வதற்கான புத்தருடைய வழி. தம்மைப் பார்த்துப் பிரார்த்திக்க வேண்டும், வழிபாடு செய்ய வேண்டும் என்றும், தான் அவர்களது பாவங்களை எல்லாம் மன்னித்து விடுவேன் என்றும் புத்தர் கூறவில்லை.

நம்முடைய மனதின் தூய்மையும், தூய்மையின்மையும் நம்மைப் பொறுத்தாகவே இருக்கிறது. கடவுளோ, புத்தரோ அல்லது எந்த மனிதருமோ ஒருவரது மனதை மாசுபடுத்தவும் முடியாது, தூய்மைப்படுத்தவும் முடியாது. உங்கள் மனதை மாசுபடுத்த என்னால் முடியாது; உங்கள் மனதைத் தூய்மைப் படுத்தவும் என்னால் முடியாது. ஆனால், என்னுடைய போதனைகளை ஏற்று செயல்படுத்துவதன் மூலம், நீங்கள் உங்களுக்குள்ளே தூய்மையை உண்டாக்கிக் கொள்கிறீர்கள். வெளியே உள்ளவர்களால் உங்கள் மனதை ஒன்றும் செய்துவிட முடியாது, உங்கள் மனதிற்கு அதைத் தடுக்கப் போதிய வலிமை இருக்குமானால். அதனால் தான், அறிவும் விளக்கமும் இன்றியமையாததாகிறது.

தனது மகிழ்ச்சிக்காக மனிதனுக்குத் தேவைப்படுவது ஒரு மதமோ, அல்லது கோட்பாடுகளின் ஒரு குவியலோ அல்ல. அன்றி, நிலையற்ற பிரபஞ்சத்தின் அகல்விசும்பு (cosmic) தன்மையைப் பற்றி காரணகாரிய விதிகளுக்கிணங்க அதன் முழுமையான செயல்பாட்டைப் பற்றியும் உள்ள ஒரு விளக்கமே தேவைப்படுவதாகும். இந்த உண்மையை முற்றாக விளங்கிக் கொள்ளாத வரை, மனிதனின் உயிரைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும் உள்ள விளக்கம் முழுமையற்றதாகவும், தவறானதாகவுமே இருக்கும். ‘புத்தரால் நமக்குக் காட்டப்பட்ட பாதையே மனிதகுலம் பேரழிவிலிருந்து தப்புவதற்குப் பின்பற்றப்பட வேண்டிய ஒரே பாதை’ என்றார் **ஜவஹர்லால் நேரு.**

## நிர்வாணம்

புத்தர் ஒருபோதும் தர்மத்தை உண்டாக்கியதாக உரிமை பாராட்டியதில்லை. அவர் கண்டுபிடித்தது வாழ்க்கையின் உண்மையான இயல்பு குறித்த உலகப் பொது உண்மையையே. சில சமயக் கலைச் சொற்களெல்லாம், அந்தக் காலத்து இந்தியாவில் ஏற்கனவே தெரிந்திருந்தனவே. ஆனால், புத்தரது தனிச்சிறப்பு யாதெனில், அவர் வழக்கிலிருந்த கருத்தாக்கங்களையே எடுத்துக் கொண்டு, அவற்றிற்கு மிக நுட்பமான பொருள்களையும், மிக ஆழமான முக்கியத்துவத்தையும் வழங்கலானார்.

எடுத்துக்காட்டாக, புத்தரது காலத்துக்கு முன்பு, நிர்வாணம் என்றால் அமைதி, அல்லது அணைந்து போதல் என்று மட்டுமே பொருள்பட்டது. ஆனால், அவர் அதற்கு முற்றிலும் புதிய பரிமாணங்களைக் கொண்ட பொருளைத் தந்தார். 'நிர்' என்றால் 'இல்லை', 'வாணம்' என்றால் 'அவா': இனி அவா இல்லை, இனி பற்று இல்லை, இனி சுயநலம் இல்லை. நாம் நிர்வாணத்தை அனுபவிக்க முடிவதில்லை; காரணம், நமக்கு அவாவும், பற்றும், சுயநலமும் இருக்கிறது. நாம் இந்த மாசுகளை அகற்றும் போது நிர்வாண இன்பத்தை அனுபவிக்க முடியும். மெய்யான இன்பத்தை அனுபவிப்பது கடினமாகவே இருக்கிறது; ஏனெனில், நமக்கு மனவெழுச்சிகள் இருப்பதுடன், புலன்களின் வேட்கையை நிறைவேற்றவும் அவாவுறுகிறோம்.

இயல்பாகவே, நம் வாழ்க்கையில் ஒரு வித இன்பத்தை அனுபவிக்கிறோம் என்பது உண்மையே. ஆனால், அதிநுட்பமான கண்ணோட்டத்தில் (absolute) பார்த்தால், இதை 'இன்பம்' என்றே கூற முடியாது; ஏனெனில், இது நிரந்தரமல்ல.

கோபத்துக்கோ, அல்லது வெறுப்புக்கோ, தன்னலத்துக்கோ, அல்லது தவறான நம்பிக்கைக்கோ இடமளிப்பதன் மூலம் நாம் பேரின்பத்தை அடைந்துவிட முடியாது. எப்போதாவது, நாம் மனவெழுச்சியில் ஓரளவு நிறைவை அனுபவிக்கத்தான் செய்கிறோம்; ஆனால், அந்த இன்பத்தின் இயல்பு மின்னலைப் போன்று விரைந்து மறைவதாக இருக்கிறது. ஒரு கணம் தோன்றி மறுகணம் மறைந்து விடுகிறது. உண்மையான இன்பம் அப்படிப்பட்டதல்ல. உண்மையான இன்பம் இருக்குமானால், நாம் ஒரு நிலையான அமைதி உணர்வை, நிறைவுணர்வை, சாந்தியை (tranquility) அனுபவிப்போம். எனவே, நம்முடைய வாழ்க்கையின் நோக்கம் நம்முடைய தெளிவிழந்த - மருண்ட - தவறாக வழிநடத்தப்பட்ட மனதைத் தூய்மையாக்கி, நம்மை நாமே கவலைகளிலிருந்தும், தொல்லைகளிலிருந்தும் விடுவித்துக் கொள்வதேயாகும். இடைவிடாது பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் எப்பொழுதும் நம் முதுகுக்குப் பின்னால் கண்ணோட்டம் செலுத்திக் கொண்டும்,

எப்பொழுதும் அடுத்து என்ன செய்வதென்று அறியாமல் திகைத்துக் கொண்டும் இருப்பதிலேயே நாம் நம்முடைய பொழுதைக் கழித்தால், நாம் ஒரு போதும் அமைதியாக இருக்க முடியாது.

## மனதை மேம்படுத்துக

நாம் மகிழ்வோடு வாழ வேண்டுமானால், நம்மை இந்த கவன சிதைவுகளிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும் என்பதே புத்தரது அறிவுரை. எனினும், இந்த விடுதலை நம்முடைய சொந்த முயற்சியால் நம்முள்ளிருந்து பெறப்பட்டதாக இருக்க வேண்டியது அவசியம். ஒரு தெய்வத்திடமிருந்தோ, புத்தரிடம் இருந்தோ, சொர்க்கத்திலிருந்தோ நம்முடைய கடைத்தேற்றத்தைப் பெற முடியாது. வெளியே உள்ள முகவர்கள் மூலமாக நாம் நமது இறுதி விடுதலையைப் பெறவே முடியாது. மீறிய இயற்கைச் (supernatural) சக்திகளை நாம் எவ்வளவு தான் விரதங்கள், தந்திரங்கள், மந்திரங்கள், ஜபதபங்கள், ஆவாகனங்கள் மற்றும் உயிர்ப்பலிகள் என்று செய்து வழிபட்டாலும், போற்றினாலும், நாம் ஞானத்தையும் (wisdom), இறுதி வீடுபேற்றையும் பெற அவை உதவ முடியாது.

'நாம் எப்படி இருந்தோமோ அதன் விளைவாகவே (இப்போது) இருக்கிறோம்; நாம் எப்படி இருக்கிறோமோ அதன் விளைவாகவே இனி இருப்போம்.'

செயல்களே நம் இன்பமும், துன்பமும் உண்டாகும் நிலைகளை உருவாக்கி, இறுதியாக நம்மைக் கடைத்தேற்றுவன. கடைத்தேறுவது, அல்லது வீடுபேறடைவது என்பது ஒவ்வொரு மனிதனும் தானே தனக்காக உண்பது, பருகுவது, செரிப்பது மற்றும் துயில்வது போன்று ஒரு தனிப்பட்ட விவகாரம். எல்லாக் கர்மவினைகளும் நம் மனோமய உருவாக்கங்களின் பகுதியாகப் பராமரிக்கப்பட்டு அங்கே அழுந்திக் கிடக்கின்றன. இந்தக் கடந்த கால வினைகள் பற்றி நாம் அறியாமலேயே இருக்கிறோம். ஏனென்றால், மற்ற மனச் செயல்பாடுகளால் மனம் இருள்

கவிழ்ந்து கடந்த கால வினைகளை மீட்டுணர முடியாமல் உள்ளது. தியானம் வாயிலாக நாம் நம் மனதை மேம்படுத்தும் போது ஐம்புலன்கள் தரும் இந்தக் கவனச் சிதைவுகளைத் தடுத்து நிறுத்துகிறோம். மனம் தெளிவடையும் போது, அது தன் பதட்டத்தையும் அவா, வெகுளி மயக்கங்களையும் அழுக்காறையும் குறைத்துக் கொள்கிறது. தெளிவடைந்த மனம் ஆற்றலும் விழிப்பும் பெறுகிறது. இது நம் மனதின் செயல்பாடுகள் மீது நாம் கவனம் செலுத்தி உள்ளடங்கியுள்ள பேராற்றலை விடுவிக்க முடியும் போது நிகழ்வதாகும். இதுவே உள்மனச் சக்தி (psychic power). இது நம் அனைவருக்கும் இருக்கிறது. நாம் செய்ய வேண்டுவது, தியானத்தின் மூலம் அதை விடுவிக்கக் கற்றுக் கொள்வது தான். அடக்கி வைக்கப்பட்டுள்ள உள்ளச் செயல்பாடுகளை அடைவதற்கான மற்றொரு வழி இப்னாடிஸம் எனும் அறிதுயில். அறிதுயில் வழியாக சில பேர் உள்மனச் சக்திகளை ஓரளவிற்கு மேம்படுத்தி இருக்கிறார்கள். ஆனால், இது பரிந்துரைக்கப்படுவதில்லை. ஏனெனில், இப்னாடிஸம் வேறொரு நபரைச் சார்ந்திருப்பதாகவும், உள்ளத் தூய்மையை உண்டாக்காததாகவும் இருப்பதனாலாகும்.

தம்மைப் பின்பற்றுவோருக்கு புத்தர் தங்களுக்குள் உள்ளடங்கியுள்ள ஆற்றலைப் பண்படுத்தி வளர்த்துக் கொள்ளும் படி அறிவுறுத்தியதுடன், தங்களுடைய விருப்பாற்றலையும், அறிவாற்றலையும் சிறப்பாகப் பயன்படுத்தி, அறியப்படாத ஒன்றுக்கு அமையாகாமலேயே நித்திய சுகத்தைக் கண்டடைவது எப்படி என்பதையும் காட்டித் தந்தார். வேறு யார் மீதும் பழியைச் சுமத்தாமல் மனிதனுடைய செயல்களுக்கு அவனே பொறுப்பு என்பதையும் பௌத்தம் போதிக்கிறது. மனிதன் வாழ்க்கையின் நிதரிசனங்களை நேர்கொண்டு தன்பாலும் பிறர்பாலும் தனக்குள்ள கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் நிறைவேற்றுவதன் மூலம் வாழ்க்கைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவனது இன்பமும் துன்பமும் அவனாலேயே உண்டாக்கிக் கொள்ளப்படுகிறது. அத்துடன், தனது பலவீனங்களைப் புரிந்து கொண்டு தனது சொந்த ஆற்றலைப் பயன்படுத்தி அவற்றை வெற்றி கொண்டு தனது

துன்பங்களை அகற்றிக்கொள்ளவும் அமைதியையும் மகிழ்ச்சியையும் பேணவும் அவனிடம் திறமையும் இருக்கிறது. மனிதனின் பண்படுத்தப்படாத மனமே எல்லாத் தொல்லைகளுக்கும், கலவரங்களுக்கும், தொந்தரவுகளுக்கும், பாதகமான சூழ்நிலைகளுக்கும், ஐம்பூதங்கள் மற்றும் பருப் பொருட்களின் மாற்றங்களுக்கும் கூட பொறுப்பு வகிக்கிறது. இதன் தலை மாற்றமாக (converse), மனிதனின் மனம் உலகின் துரதிர்ஷ்டவசமான நிலைமைகளை மாற்றி அதை அனைவரும் வாழ்வதற்கான அமைதி நிறைந்த, வளம் செறிந்த, மகிழ்ச்சிமிக்க இடமாக ஆக்கவும் முடியும். மனதின் சக்தியைப் பண்படுத்துவதன் வாயிலாக மட்டுமே இதைச் சாதிக்க முடியும்.

## புத்தரின் வழிமுறை

புத்தரின் போதனா முறை மற்றவர்களின் முறையிலிருந்து மாறுபட்டது. அவர் ஒரு போதும் தயாரித்து வைத்துக் கொண்டு பொதுமக்கள்முன் பேசியதில்லை, சொற்பொழிவாற்றியதுமில்லை. அவர் எப்பொழுதும் அந்த அந்த நேரத்து உடனடி நிகழ்ச்சி, அல்லது உற்றுநோக்கிய சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டே தம் பேச்சின் பொருளைத் தீர்மானித்தார். புத்தரின் மேதாவிலாசத்தையும், ஓர் ஆசிரியர் என்ற முறையிலான அவரது திறமையையும் காட்டும் குறிகளுள் ஒன்று 'அறிந்ததிலிருந்து அறியாததற்கு, இட்டுச்செல்லும் நன்கு பழகிப்போன அவரது கற்பித்தல் பழக்கமாகும். எடுத்துக்காட்டாக, ஒரு ஆற்றங்கரை ஓரமாக ஒரு சமயம் அவரும் அவரது மாணாக்கர்களும் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு மரத்துண்டு ஆற்றோட்டத்தில் மிதந்து செல்வதைக் கவனித்தார். நின்று தம் மாணாக்கர்களைக் கேட்டார், 'இந்த மரத்துண்டைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதற்கு என்ன நேரும்?'

ஒரு மாணவர் பதிலளித்தார்.

'ஆற்றின் நடுவில் உள்ள ஒரு தீவில் அது கரை சேரலாம்.' மற்றவர்கள், 'அது நீரில் நன்றாக ஊறி மூழ்கிப் போகலாம்'

என்றும், 'அது தன்னுடைய கடலை நோக்கிய நிறைவு செய்யும்' என்றும் கூறினார்கள்.

இப்பொழுது, யார் சொன்னது சரி? அந்த மரத்துண்டின் விதியை யாரால் மிகத் துல்லியமாக முன்னறிவிக்க முடியும்?

அதன் பிறகு புத்தர், நம்முடைய வாழ்க்கையும் ஆற்றோட்ட த்தில் மிதந்து செல்லும் மரத்துண்டைப் போலவே மிகவும் உறுதியற்றதாகவே இருக்கிறது என்று விளக்கமளித்தார். அடுத்த நாளோ அல்லது அடுத்த மாதமோ நமக்கு என்ன நடக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. அன்றாட வாழ்க்கையிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதே அவரது வழிமுறை. ஆகவே அவரது போதனைகள் எப்பொழுதும் இங்கு - இப்பொழுதில் வேரூன்றியதாகவும், மனித அனுபவத்திற்கு முற்றிலும் பொருத்த மானதாகவும் இருந்தன.

இவ்வாறாக, மனிதர்கள் தம்முடைய பொது அறிவைப் (common sense) பயன்படுத்தி சுதந்திரமாகச் சிந்திப்பதற்கு அவர் ஊக்கமளித்தார். அச்சத்தாலும், எவ்வித உலகியல் ஆதாயத்திற்கான அவாவினாலும் அடிமைத்தனமாகக் கடைப் பிடிப்பதற்காக ஒரு சமயத்தை அவர் அறிமுகப்படுத்தவில்லை.

புத்தரது கருத்துப்படி, அழகியதொரு கருத்தையும், சொல்லையும் தொடர்ந்து, அதற்கேற்ற செயல் இல்லாது போனால் அது அழகிய மலரொன்று மணமற்றிருப்பது போலாகும்; அது பயன்தராது.

புத்தர் அறிமுகப்படுத்திய எண்சீர்ப் பாதையானது அகமுகப் பண்பாட்டுக்கும், முன்னேற்றத்துக்குமாகத் திட்டமிடப்பட்ட ஒரு செயல்திட்டமாகும். புற வழிபாட்டையும், சடங்குகளையும், பிரார்த்தனைகளையும் மட்டுமே நாடுவதன் மூலம் ஒருவர் ஒழுக்கத்திலும், உண்முக மேம்பாட்டிலும் ஒருபோதும் முன்னேற்றம் காண முடியாது. வீடுபேற்றுக்காகப் பிரார்த்தனை மட்டுமே செய்வதை புத்தர், 'சொந்த உழைப்பில்லாமல் அக்கரை சேர்வதற்காக ஒருவன் ஆற்றின் மறுகரையை நோக்கி, அதை இந்தப் பக்கம் வரும்படி கேட்பதைப் போல் இருக்கிறது' என்கிறார்.

## தன்னைக் கண்டறிதல் (Self Discovery)

பல சமயங்கள் கடவுள் ஒருவரால் மனித குலத்திற்கு செய்திகள் வெளிப்படுத்தப்படுவதாக வாதிடுகின்றன. ஆனால் பகுத்தறிவாளர்கள் கேட்கிறார்கள்: ‘இருப்பது ஒரே கடவுளானால் அவர் மனித குலம் அனைத்தினது நலனுக்காகவும் தமது செய்தியைக் கொடுத்திருந்தால், உலகில் ஏன் இத்தனை வெவ்வேறு நம்பிக்கைகள்? அந்தச் செய்தி மனிதகுலம் முழுமைக்குமானதானால், சந்தேகத்திற்கோ, தவறாக பொருள்கொள்வதற்கோ இடமில்லாதவாறு, தமது செய்தியை வெளிப்படையாகப் பொதுவில் அறிவிக்க, கடவுளுக்கு உண்டான இடர்பாடுதான் என்ன? ஒவ்வொருவரும் அந்தச் செய்தியை ஏற்றுக் கொண்டிருப்பார்களே! சமயப் பிணக்குகளே இருக்காது. உலகம் முழுவதும் கடவுளின் ஒரே செய்தியையே பின்பற்ற முடிந்திருக்கும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, மலேசியா பல்கலைக்கழகத்தில் ‘சமயக் கருத்தரங்கு’ ஒன்று நடைபெற்றது. ஒவ்வொரு சமயத்திற்கும் ஒருவர் வீதம் ஐந்து பேச்சாளர்கள் இருந்தனர். அவர்களெல்லாம் பேசி முடித்த பிறகு, மாணவர் ஒருவர் கேட்டார்:

‘நம்முடைய சமயத்தைப் பற்றிப் படிக்கும் போது, இந்த உலகத்தைப் பற்றியும், பிரபஞ்சத்தைப் பற்றியும், மற்றும் உயிர் வாழ்க்கையைப் பற்றியும் சில தகவல்களைப் பெறுகிறோம். நாம் அறிவியல் படிக்கும் போதோ, முற்றிலும் மாறான தகவல்களைப் பெறுகிறோம். இந்தத் தகவல்கள் நம்முடைய சமயக் கருத்துக் களுக்கு முரண்படுகின்றன. ஆகவே, எனக்கு எதை ஏற்பதென்று தெரியவில்லை: எனது சமயம் போதிப்பவற்றையா, அல்லது அறிவியல் கற்பிப்பவற்றையா?’

பேச்சாளர்களில் ஒருவர் பதிலளித்தார்:

‘நன்று! என் நம்பிக்கையாவது: கடவுள் தமது கொள்கை களை ஒரு செய்தி வடிவாக ஒரு மனிதனுக்குக் கொடுத்தார்; அந்த மனிதன் அதைப் பிறருக்குப் பரப்பினான். எனவே நாம் கடவுளின் வார்த்தையைக் கட்டாயம் நம்பியாக வேண்டும்.

ஆனால், அந்த மாணவர் தொடர்ந்தார்: 'இந்தச் செய்தி அறிவிக்கப்பட்ட மக்கள் அதைச் சரியாகதான் புரிந்து கொண்டார்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அவர்களது உள்ளத்தில் அது உருத்திரிபடைந்து தவறாக பொருள்படுத்தப் பட்டு, அதன் பிறகு பின் சந்ததியினருக்கு வழங்கப்பட்டிருக்கலாமல்லவா?'

இதற்கு மாறாக, வெளி ஆதாரங்களிலிருந்து (sources) அறிவைப் பெற்றது போன்று புத்தர் ஒரு போதும் எதையும் வலியுறுத்தியதில்லை. தம்முடைய சமய போதனை பணி முழுவதிலும், தம் பேச்சைக் கேட்பவர்கள், உண்மையைத் தாங்களாகவே தனிப்பட உணர்ந்து கொள்ளும் வகையில், தம்மைக் கேள்வி கேட்கவும், தமது போதனைகளுக்குச் சவால் விடுக்கவும் அவர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு என்று எப்பொழுதும் வலியுறுத்தி வந்தார். 'வந்து பார்த்துக் கொள் (ஏஹிபஸ்ஸிகோ) என்று தான் அவர் கூறினார். 'வந்து நம்புங்கள்' என்று அவர் சொன்னதில்லை.

அவர் எதை கூறிய போதும் அக் கூற்றை ஒரு சாதாரண மனிதர் என்ற முறையில், தமக்குத் தாமே தனிப்படச் சோதித்து உண்மையென்றறிந்த காரணத்தினாலேயே அவ்வாறு கூறினார். அவர் எவ்வித தெய்வீகத் தன்மைக்கும் உரிமை பாராட்டவில்லை. அவர் அனைத்தையும் புரிந்துவைத்திருந்தார். ஏனெனில், தமது எத்தனையோ முற்பிறவிகளில் அறியாமையினால் தாம் செய்திருந்த எல்லாத் தீவினைகளுக்காகவும் தாம் எப்படியெல்லாம் துன்பப்பட நேர்ந்ததென்பதை அவர் அறிந்திருந்தார். அவர் கடினமான வழியில் தான் கற்றுக் கொண்டார். அவர் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாக, தம்மை பின்பற்றுவோருக்கு அறிவுறுத்தினார். அவர் எண்ணற்ற பிறவிகளாக மாபெரும் ஒழுக்க சீலங்களை (பாரமிதைகளை) கடைப்பிடித்தும் இறுதியில் பேரின்பத்தை அனுபவித்தும் மனிதக் குலத்துக்கு மகத்தான சேவை ஆற்றியுள்ளார். எது மிகவும் நம்பகமானதென்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். சொந்த அனுபவத்திலிருந்து

பேசும் ஒருவரது சான்றா? அல்லது எப்போதும் கண்ணுக்குப் புலப்படாத வேறொருவரிடமிருந்து சொல்லக் கேட்டிருப்பதாக உரிமை பாராட்டி கொள்ளும் ஒருவரது சான்றா?

### சிந்தனைச் சுதந்திரம்

கோட்பாடுகளையோ, கோட்பாட்டுக் குழுக்களையோ, குருமார்களையோ சாராதிருக்கவே புத்தர் அறிவுறுத்தியுள்ளார். உண்மையில், நாம் எப்பொழுதும் தற்சார்பின் மூலம் நமக்கு நாமே தலைவர்களாக இருக்க வேண்டியது அவசியம். நாம் ஒருபோதும் நம்முடைய கண்ணியத்தையோ, விருப்புரிமையையோ ஒப்படைத்து விடக்கூடாது. தற்சார்பு, தூய்மை, மரியாதை, மெய்யொளிப்பேறு, அமைதி மற்றும் உலகளாவிய அன்பு பற்றிய கோட்பாட்டையே புத்தர் உறுதியாகப் பரிந்துரைத்தார். அவர் புரிந்துகொள் வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்; ஏனெனில், புரிதல் இல்லாமல் ஞானத்திற்கு இட்டுச் செல்லும் உள்மன (psychic) உட்காட்சியைப் பெற முடியாது. 'நீங்கள் உங்களது துக்கமும், அச்சமும் முடிவுக்கு வருவதைக் காண விரும்பினால், ஒழுக்கத்தையும், இரக்க தேடுதலையும் வளர்த்துக் கொள்ளுங்கள்' என்று அவர் கூறுகிறார். புறத்தே உள்ள செல்வாக்குச் சக்திகளைச் சாராதவாறு சுதந்திரமாக சிந்திக்கவும், புரிந்து கொள்ளவும நாம் எப்பொழுதும் நமது மனதைக் கட்டாயம் அனுமதிக்க வேண்டும். பிறரைச் சார்ந்திருப்பவர்கள் சிறு குழந்தைகளைப் போன்றவர்கள். மெய்யொளிப்பேறு அடைவதற்காகத் தாம் தியானித்துக் கொண்டிருந்த போது, எந்தக் கடவுளும் வந்து ஆன்மீக (spiritual) சித்திகளின் மறைவான மந்திரங்கைள தம் காதில் குசுகுசுக்கவில்லை என்று கூறிய புத்தரின் முன்மாதிரியை நாம் அவசியம் பின்பற்ற வேண்டும். அறிமுகம் செய்துவைப்பதற்கென்று, எந்த கட்டளைகளையும், சமயச் சட்டங்களையும் யாரும் அவருக்கு தரவில்லை, 'மெய்யொளி (enlightenment) கற்பிக்கவோ, சொல்லித்தரவோ நான் ஒருபோதும் எந்த ஆசிரியரையும், தெய்வத்தையும் வைத்துக் கொள்ளவில்லை' என்றார் அவர்.

அதனால் தான் தமது மெய்யொளிப் பேற்றின் போது தம்முள் ஞானம் 'உதித்தது' என்று கூறியுள்ளார். நம் யாவரிடத்தும் ஞானம் உள்ளடங்கி உள்ளது. அது உதித்தெழுவதற்கு நாம் செய்ய வேண்டுவது, சரியான சூழ்நிலைகளைத் தருவது மட்டுமே.

அறிவுத்துறை (intellectual) சார்ந்ததும், தத்துவம் (philosophical) சார்ந்ததுமான பௌத்தத்தின் உள்ளடக்கத்திலிருந்து உதித்தனவே சிந்தனைச் சுதந்திரமும், ஆய்வுச் (விசாரணை) சுதந்திரமும் ஆகும். இதற்கு இணையாக, நிலைபெற்றுள்ள சமயங்கள் எதிலும் எதுவுமில்லை. எந்தக் கோட்பாட்டையும் ஏற்றுக்கொள்ளவோ, நம்பவோ எவ்விதமான கட்டுப்பாடும், கட்டாயமும் அங்கில்லை.

பார்த்து புரிந்து கொள்ளுவதே பௌத்தத்தின் அணுகுமுறை. அது ஒரு அறிவியல்பூர்வமான மனப்பாங்கு. பௌத்தம் போதிக்கும் அடிப்படைத் தத்துவக் கோட்பாடுகள், புதிய அறிவியல் கண்டு பிடிப்புக்கள் மூலம் மேலும் மேலும் வலுவடைந்து வருகின்றன. சமூகத்தில் உள்ள தனிமனிதனுக்கு பௌத்தம் தன்னம்பிக்கை, சுயகட்டுப்பாடு, தற்சார்பு மற்றும் தன்னைத் தானே தூய்மைப் படுத்திக் கொள்வது ஆகியவற்றை அறிவுறுத்துகிறது.

பௌத்தத்தின் ஒரு வலுவான பகுதி, அது மக்களாட்சி லட்சியங்களுக்குத் தரும் முக்கியத்துவமாகும். தடையற்ற விவாதங்கள் ஊக்குவிக்கப்படும் அங்கே முரணான கண்ணோட்டங்களும் வெளிப்படுத்தப்பட்டு, மனம் விரிவடையவும், வளப்படவும் இட்டுச் செல்லப்படுகிறது. இந்த மக்களாட்சி கொள்கைகளின் மீதே துறவியரின் மரபும், ஒழுக்கமும் (order) அமைக்கப் பட்டுள்ளது.

தாமே எடுத்துரைத்தவற்றைக் கூட முதலில் ஆராய்ந்து பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளாமல், ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று தம்மைப் பின்பற்றுவோருக்கு வலியுறுத்திக் கூறக்கூடிய பரந்த மனப்பான்மையும், துணிவும் வாய்ந்த ஒப்புயர்வற்ற புத்தபிரான் வெளியிட்ட தம்மத்திற்கேற்பவே இது அமைந்துள்ளது.

உண்மையில் தம்மமே தமது ஆசான் என்றும் தாம் செய்வதெல்லாம் அறியாமையில் உழல்வோருக்கு மறைந்து கிடக்கும் இந்த உலகப்பொதுவான தம்மத்தின் உண்மையை வெளிப்படுத்துவது மட்டுமே என்றும் புத்தர் கூறியுள்ளார். ஒருதலைச் சார்பு இல்லாமலும், சுதந்திரமாகவும் சிந்திக்க நம்முடைய மனங்களுக்கு நாம் கட்டாயம் சுதந்திரம் தர வேண்டும்.

'உங்களுக்கு நீங்களே புகலிடமாக இருங்கள்' என்பதே புத்தர் தாம் பரிநிப்பானமடையு முன்பு கூறிய கடைசிச் சொற்கள். நாற்பத்தைந்து ஆண்டு காலம் போதனை செய்த பிறகு அவர் ஏன் இத்தகைய சொற்களை கூறினார்? அவர் ஏன் தம் மூலமாக கடைத்தேறிக் கொள்ளும்படி எல்லோருக்கும் யோசனை கூறவில்லை? பிறரைச் சார்ந்திருப்பதன் மூலம் நாம் கடைத் தேறுவதற்கு முயலக்கூடாது என்பதே அவரது கருத்து. நாம் நம் மீதே தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். என்ன அற்புதமான கண்ணியம் மிக்க அறிவுரை! இப்பொழுது நீங்கள் கேட்கலாம்: 'நாம் ஏன் "புத்தம் சரணம் கச்சாமி" (புத்தாரம் அறவோரிடம் புகுகிறேன் அடைக்கலம்) என்று சொல்கிறோம்?'

நாம் இப்படிக் கூறும் போது நாம் புத்தரை சார்ந்திருக்கிறோம் என்ற பொருளைக் குறிப்பிதில்லை. நாம் குறிக்கும் பொருளாவது புத்தர் கற்பித்த வழியை நாம் பின்பற்றினால் நம்முடைய சொந்த கடைத்தேற்றத்தை அடைவதற்கான தன்னம்பிக்கையை நாம் மேம்படுத்தி கொள்வோம் என்பதாகும். புத்தர் ஒரு நாள் வருவார் என்றும், மகத்தானதொரு விண்வெளிப் பயணத்தில் நம்மை யெல்லாம் 'சொர்க்கத்'திற்கு அழைத்துச் செல்வார் என்றும் நாம் நிச்சயமாகவே நினைப்பதில்லை.

சிலர் புத்தர் ஒரு மனிதரே என்றும், அவர் ஒரு கடவுளல்ல என்றும் கூறுகின்றனர். அவரை ஏன் மக்கள் பின்பற்ற வேண்டும்? என்றும் கேட்கின்றனர். பௌத்தர்கள் தங்கள் கடைத்தேற்றத்தை புத்தரிடமிருந்து நேரடியாக எதிர்பார்ப்பதில்லை; அன்றி, அவர்

கற்பித்த வழியைக் கடைப்பிடிப்பதன் மூலம் தான் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. தொடக்கத்திலிருந்தே நம்முடைய மனங்களை பழக்குவதன் மூலம் எப்படி தற்சார்பை வளர்த்துக்கொள்வதற்கு உழைப்பது என்ற பயிற்சியே புத்தரின் வழியாக இருந்தது. தன் உழைப்பும் தானே துய்த்துணர்வதும் தான் கடைத்தேற்றத்துக்கான ஒரே வழி.

யாரொருவரும் புத்தரின் முன்னிலையில் அடிமை போன்றில்லாது கண்ணியத்தோடு நிற்க முடியும். நன்னம்பிக்கையும், தன்னம்பிக்கையும் கொண்டு ஒருவர் தன்னுடைய தலைவிதியை தானே நிர்ணயித்துக்கொள்ள முடியும். ஒரு கவுரவமான மனிதராக நீங்கள் நிற்பதை புத்தர் வரவேற்கவே செய்வார். ஆனால், நீங்கள் நேர்மையான முறையில் உங்கள் நம்பிக்கைகளுக்கு முரண்படும் அறிவுபூர்வமான வாதங்களுக்கு செவிசாய்க்கவும், சரியாக உற்றுநோக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

விளக்கம் கேட்க வந்த மக்களின் மனப்பாங்கு இதுவாகத் தான் இருக்க வேண்டும். புத்தர் மரணத் தருவாயில் இருந்த போது அவருக்குத் தமது இறுதி மரியாதையைச் செலுத்து வதற்காக பல பெரிய மனிதர்களும், இளவரசர்களும், அமைச்சர் களும், தேவர்களும் கூட மலர்களோடு வந்திருந்தனர். ஆனால், புத்தர் தம்முடைய நெருங்கிய தொண்டர் ஆனந்தரை அழைத்து, '**யாரேனும் தங்கள் ஆசானுக்கு மரியாதை செலுத்த விரும்பினால், அவர்கள் அவரது போதனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்**' என்று அவர்களிடம் கூறும்படி பணித்தார். அவர் தமக்கென்று தனிப்பட்ட பெருமையை விரும்பவில்லை என்பதையும், தமது அதிகாரத்திற்கு முற்றாக கீழ்ப்படிவதை அவர் வற்புறுத்தவில்லை என்பதையுமே இது காட்டுகிறது.

## நடுவு நிலைமை

உண்மையை உணர்ந்த பிறகு விளக்கம் கேட்க வந்த மக்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளும் பொருட்டு

தங்கள் மனங்களைப் பண்படுத்த முயல்கின்றனர். "யாராவது சொல்வதை அவர்கள் ஏற்றுகொள்வதுமில்லை, புறக்கணிப்பது மில்லை. எப்பொழுதும் பிறருடைய கருத்துக்களையே சார்ந்திரு ப்பவர்கள் இரண்டாந்தர மனிதர்கள்" என்பார் ஜே.கிருஷ்ணமூர்த்தி. சமயப் பயிற்சி என்று கற்பிக்கப்படும் எதையும் ஏற்றுக்கொள்ளவோ, நம்பவோ வேண்டாம்; நாம் உண்மை என்று ஏற்றுக்கொள்ளும் சிலவற்றைப் பிற்காலத்தில் வெறும் பொய்யென்று நாம் உணரக்கூடும். அதனால் தான் புத்தர், நாம் கேள்விப்படும் ஒன்றில் ஏதேனும் உண்மை உள்ளதா என்பதையும், அதை ஏற்றுக் கொள்வதா, புறக்கணிப்பதா என்பதையும் முடிவு செய்வதற்கு முன்பாக, சிறிது காலம் பொறுத்திருந்து, ஆய்ந்து, சிந்தித்து உற்றுநோக்கி, புலனாய்வு செய்யுமாறு அறிவுறுத்துகிறார். நம்முடைய மனவெழுச்சிகளையோ, மூடநம்பிக்கையையோ, கவலையையோ சார்ந்திருந்து நாம் சிலவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடும். சோம்பல், அல்லது மனக்குழப்பத்தின் விளைவாக நாம் கேள்விப்படும் ஒன்றைப் புறக்கணிக்கலாம், அல்லது நம்பாதிருக்கலாம். ஆகவே, அது உண்மையா, இல்லையா என்பதைச் சிந்தித்து விளங்கிக் கொள்ள நாம் மனதிற்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும்.

## நம்பிக்கை (Faith)

வெறும் நம்பிக்கை பொருளற்றதாகும். ஏனென்றால் நம்பிக்கையானது பயிற்சியளிக்கப்பட்ட மனதிலிருந்து பிறக்கும் விளக்கத்தினால் கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு சமயத்தைப் பின்பற்றுபவர் தனது நல்வாழ்வு உணர்வும், தன் நிறைவேற்ற உணர்வும் உயர்ந்தபட்சமாகுமாறு, தன் அறிவைத் திறனாய்வு சார்ந்த விளக்கத்துடன் பயன்படுத்துவது எப்படி என்பதைக் காட்டித் தருவதே அச்சமயத்தின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். நமக்கு எவ்வளவு தான் அறிவிருந்தாலும், நாம் நமது மனதிலிருக்கும் மாசுக்களையும், ஐயங்களையும் வேருடன் களையாவிட்டால் நாம் ஒரு மகிழ்ச்சியற்ற நிலை யிலேயே இருப்போம். நாம் அதியுன்னத தூய்மை நிலையை (அரஹந்த நிலையை) அடையும் பொழுது, நாம் நம்முடைய அவா வெகுளி மயக்கங்களை அறவே வேரறுத்து, மனதின்

முழுமையான சமநிலையை நிலைநாட்டுவோம். அப்பொழுது தான் அந்த 'தூயவர்கள்' எவ்விதத் தீய எண்ணங்களையும் உண்டாக்கவே முடியாத நிலையை அடைகிறார்கள். கடுமையான சொற்களைக் கூறவோ, தீச்செயல்களைப் புரியவோ அவர்களால் முடியாது. தன் மனத்தை தூய்மையாக்கிவிட்ட ஒருவர் அதிகாரத்தில் இருப்பவர்களை விட அல்லது வெறும் நம்பிக்கையோ, அறிவாற்றலோ கொண்டு மனமாசுகளில் உழன்று கொண்டிருப்பவர்களை விட நூறு மடங்கு உயர்ந்தவராவார்.நாம் நாகரீகமானவர் களென்று உரிமை கோருகிறோம்; ஆனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நமது பண்பாடறியாத முன்னோர்களிடம் காணப்பட்ட அதே அளவு தூய்மையற்ற போக்குகளை நமது மனமும் காட்டும் பொழுது, நாம் எப்படி அவ்வாறு உரிமை பாராட்ட முடியும்?

உலகெங்கிலும் மக்கள் பிரார்த்திக்கவும், பலியிடவும், நோன்பு நோற்கவும் கோவில்கள், ஆலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் பிற வழிபாட்டு நிலையங்களில் கூடுகிறார்கள். ஆனால், அவர்கள் வெளியே வரும்பொழுது முன்பு அவர்களிடமிருந்த அதே கோபம், ஆசை, பொறாமை, காழ்ப்பு மற்றும் பகைமையைத் தான் பெற்றிருக்கிறார்கள். பிரார்த்தனை, வழிபாடு மற்றும் சமயச் சடங்குகளைச் செய்யும் பொழுது மக்கள் தங்களை சமயப் பற்றாளர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். ஆனால், அவர்களின் மனங்கள் சுயநலத்திற்கும், தவறான வழியிலும் தான் இருக்கின்றன. அவர்கள் உண்மையிலேயே சமயப் பற்றாளர்களாக இருந்தால் பிறருக்கெதிராக வேறுபாடு காட்டமாட்டார்கள்; மற்றவர்களின் சமய நடவடிக்கைகளைப் பரிகாசம் செய்து புண்படுத்த மாட்டார்கள். வெறித்தனமான மத நம்பிக்கைகளையும், பாகுபாடுகளையும் வளர்த்துக் கொள்ளாமலேயே, கருத்துக்களை முற்றிலும் சரியாக விளங்கிக் கொள்ளுமாறு நமது மனங்களை விரித்துவிடவே புத்தர் முயன்றார்.

## சமய எதிர்ப்பு (Heresy)

புத்தரது போதனைகள் நிலைபெற்றுள்ள சமயங்களின் வகையில் சேராதிருப்பதற்கான மற்றொரு காரணம், இதன் அமைப்பு முறையில் 'சமய எதிர்ப்பு' என்பதற்கு இடமே இல்லாதிருப்பதாகும். 'சமய எதிர்ப்பு' என்பது 'கடவுளின் சொற்களுக்கு சவால் விடுக்கும்' ஒன்றாகும். எந்தவிதமான ஐயப்பாட்டுக்கும் இடமில்லாது இருக்கும் பொருட்டு, தமது போதனைகளை எல்லாக் கோணங்களிலிருந்தும் எதிர்க்கும்படி, தம்மைப் பின்பற்றுபவர்களையும் சரி, தம்மை எதிர்ப்பவர்களையும் சரி, இரு தரப்பினரையும் அவர் தாராளமாகவே அழைத்தார். அவரது ஆணைக்கு ஏற்பவே, அவரைப் பின்பற்றியவர்களும் அவரது கொள்கைகள் பற்றி விவாதித்ததுடன், அவரவர்கள் விளங்கிக் கொண்ட விதத்துக்கு ஏற்றபடி, பல்வேறு பௌத்த சமயப் பிரிவுகளை நிறுவினர். எவ்வித வன்முறையும் இரத்தம் சிந்துதல் இல்லாமல், உண்மையில், நாளந்தாவில் இருந்த புகழ்பெற்ற பௌத்த பல்கலை கழகத்தில் (பிற சமயத்தினரின் வெறித்தனத்தால் அழிக்கப்பட்ட அதில்) பௌத்த சமயத்தின் தேரவாத பள்ளியை பின்பற்றியோரும், மகாயானப் பள்ளியைப் பின்பற்றியோரும் கூடி வாழ்ந்தது, முழு இசைவிணக்கத்துடனே தம் வெவ்வேறு கண்ணோட்டங்களை ஆய்வு செய்யவும் விவாதிக்கவும் செய்தனர். யாரேனும் தனக்கு 'உண்மை' தெரியும் என்று நம்புவாரானால், அவர் அதற்கு அறைகூவல் விடப்படுவது கண்டு அஞ்சக்கூடாது; ஏனெனில், எப்பொழுதும் வாய்மையே வெல்லும். மேலும், அவர் தம் போதனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு யாரையும் உற்சாகமாகவே ஊக்குவித்தார். எண்ணற்ற வினாக்களுக்கு அவர் அளித்த விடைகள், அவரது மாணாக்கர்களால் மாற்றமேதுமின்றிப் பதிவு செய்யப்பட்டு, ஒரு பரந்துபட்ட சமயக் களமாக அக் கோட்பாட்டினை வளமாக்கின. இன்று நாம் பௌத்தத்தைப் பற்றிய எந்தக் கேள்விக்கும் புத்தர் அளித்துள்ள விளக்கங்களைப் பார்த்தே விடையளித்து விடலாம். பகுத்தறிவுச் சிந்தனையும், திறனாய்வுக்கு அழைப்பு விடுப்பதன் முதன்மையும் பவுத்தத்தில் மிகவுயர்ந்த இடம்பெறுவனவாகும்.

## அறிவியல்

ஒரு சமய போதனைக்கான சோதனை அது அறிவியல் கண்டுபிடிப்புக்களுடன் எந்த அளவுக்கு ஒத்திருக்கிறது என்பதும், கூர்மையான நுண்ணறி படைத்தவர்களின் மனங்களில் அது எந்த அளவிற்கு விரிவடைய விரிவடைய, சில சமயங்கள் தொல்லை களை ஓரளவு அனுபவித்துள்ளன. அதன் விளைவாக, அவர்களது சமய நூல்களில் சில மாற்றங்களோ (Modifications) மறு விளக்கங்களோ தேவையாகிவிட்டன. இந்த வகையில், மெய்யொளிப் பேறுற்ற புத்தரின் பகுத்தறிவார்ந்த போதனைகளான பௌத்தம், அதன் அடிப்படைக் கொள்கைகள் அறிவியலின் கண்டுபிடிப்புக்களுடன் நெருங்கிய இணக்கம் கொண்டிருப்பதால், அத்தகைய தடுமாற்றங்களை எதிர்கொள்ளவில்லை. ஒரே ஒரு எடுத்துக் காட்டை ஆய்வு செய்வோம்.

அணுவைப் பற்றிய மிக அண்மைக் காலத்து ஆய்வுகளின் விளக்கத்தில், அணு பற்றிய கருத்தாக்கமே மாறிக் கொண்டிருப்பது போலவே உலகம் பற்றிய பழைய கருத்தாக்கமும் அடிப்படையிலேயே மாற்றமடைந்து வருகிறது. கடந்த காலத்தில் நம்பப்பட்டு வந்து போன்று பருப்பொருள் (matter) இருக்கவில்லை; அது ஆற்றலாக குறுக்கப்பட்டுவிட்டது. அத்துடன், ஆற்றல் என்ற கருத்தாக்கம் கூட படிப்படியாக மறைந்து, அதை என்னவென்று அழைப்பதென்று விஞ்ஞானிகளுக்கே தெரியாமல் இருந்து வருகிறது. இப்பொழுது அவர்கள் 'அணு' என்பது ஒரு கருத்தாக்கம் (concept) மட்டுமே என்ற முடிவுக்கும், அதன் விரிவாக இந்த உலகமும் ஒரு கருத்தாக்கமே அன்றி வேறல்ல என்ற முடிவுக்கும் வந்து கொண்டிருக்கின்றனர்.

பௌத்தத்தில் இந்தக் கோட்பாடு 16 நூற்றாண்டுகளுக்கு முன்பு, அல்லது அதற்கும் முன்பே விளக்கப்பட்டுள்ளது. கி.பி. நான்காம் நூற்றாண்டில், பௌத்த தத்துவமேதையான அசங்கர் 'விஞ்ஞாப்திமாத்ரம்' அல்லது 'சித்த-மாத்ரம்' என்ற கொள்கையை உருவாக்கினார். அந்தக் கொள்கை, இவ்வுலகம்

ஒரு கருத்து மட்டுமே, ஒரு எண்ணம் மட்டுமே, ஒரு சிந்தனை மட்டுமே என்று எடுத்துரைக்கும் மூல திருமறை (canonical) நூல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். தம்முடைய கொள்கைகயை நிறுவுவதற்காக அசங்கர் 'அணு' என்றால் என்ன என்று வரையறுக்க வேண்டி இருந்தது. பதினாறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட அவரது வரையறை இன்றளவும் ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருந்து வருகிறது. அணுவை (பரமாணு) பருவுடல் அற்ற (நச்சஸரீர) ஒன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். பருப்பொருளின் திண்மையைக் கடைமுடிவாகப் பகுப்பாய்வு செய்வதன் வாயிலாக அறிவாற்றலால் தான் அணுவின் இயல்பு உறுதிசெய்யப்படுகிறது. இயல்பாகவே, அசங்கரின் ஆர்வம் இருந்தது இயற்பியலில் அல்ல; ஆனால், இயல் கடந்த இயற்பியலிலும் (metaphysics), தத்துவத்திலுமே (philosophy) ஆகும். சாதாரண மக்கள் திண்மைப் பொருளாக (Substance) எடுத்துக் கொள்ளும் இந்த உலகம் உண்மையான ஒன்றல்ல, வெறும் ஒரு கருத்தாக்கம் மட்டுமே என்பதைக் காட்டுவதே அவரது ஆர்வமாக இருந்தது. ஆர்பர்ட் ஐன்ஸ்டீனின் கருத்துக்கிணங்க, இப் பிரபஞ்சத்தைப் பகுப்பாய்வு செய்து பார்த்தால் திண்மப் பொருளாக எதுவும் எஞ்சுவதில்லை; ஆனால், வெறும் அதிர்வுகள், அல்லது அலைகளே எஞ்சும்.

புத்த தம்மக் கோட்பாடானது, அது முதன்முதலில் எடுத்துரைக்கப்பட்டது போலவே, கால ஓட்டத்தாலும், அறிவின் விரிவாக்கத்தாலும் பாதிக்கப்படாமல், இன்றும் நிலைநிற்கிறது. மனிதனது உள்ளத்தின் விளிம்பெல்லையை (horizon) அறிவியல் அறிவுப் பெருக்கம் எந்த அளவுக்கு விரிவாக்கிய போதிலும், அதை ஏற்றுக்கொள்வதுடன், அடுத்து வரும் கண்டுபிடிப்பையும் ஈர்த்துக் கொள்ள, தம்மத்தின் அமைப்புச் சட்டத்திற்குள் (frame work) இடம் இருக்கவே செய்யும். ஏனென்றால், பௌத்தம் தனது கவர்ச்சிக்காக பண்படாத உள்ளங்களின் குறுகிய கருத்தாக்கங்களைச் சார்ந்திருக்கவும் இல்லை; மற்றும், தனது அதிகாரத்திற்காகக் கருத்துக்களை மறுப்பதையும் சார்ந்திருக்கவில்லை.

## அற்புதங்கள்

அறிவியல் ஒரு காலத்தில் செய்தது போன்று இன்று அற்புதங்களின் சாத்தியத்தை மறுப்பதற்கில்லை; ஆனால், அற்புதங்கள் என்பன இன்னும் அறியப்படாத இயற்கையின் வெளிப்பாடுகளே என்று ஏற்றுக்கொள்ளத் துவங்கியுள்ளது. புத்தரே எடுத்துரைத்துள்ள கருத்து யாதெனில், சித்துக்களைத் தம்மளவில் உண்மையின் செயல்விளக்கமாகக் கொள்ள வேண்டுவதில்லை என்பதும், அவை சிலரால் வளர்த்துக் கொள்ளக்கூடிய அதிகம் அறியப்படாத சக்திகளின் மீதான ஆதிக்கத்தை மட்டுமே காட்டுகின்றன என்பதுமேயாகும். இதைக் கொண்டு, அவற்றைப் பெற்றவர் மெய்யொளி பெற்ற ஞானியாகவோ தெய்வீகம் பொருந்தியவராகவோ இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை.

இது இவ்வாறு இருக்கின்ற காரணத்தால், புத்தர் தம் மாணாக்கருக்கு அவர்கள் அடையக்கூடும் எவ்வித சித்தாற்றல் களையும் பயன்படுத்துவதில் எச்சரிக்கையாக இருக்கும்படி மட்டுமன்றி, மற்றவர்களையும் அத்தகைய காட்சிகளால் தகுதிக்கு மீறி பாதிக்கப்படாதிருக்குமாறும் போதித்துள்ளார். இவ்வாறாக, பிற சமயங்களெல்லாம் மக்களை நம்ப வைப்பதற்காக அற்புதங்கள் சார்ந்த அம்சங்களை முடிந்த அளவு உயர்ந்த பட்சமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்க, பௌத்தம் அத்தகைய அனைத்தையும் மிகவும் அற்ப முக்கியத்துவம் வாய்ந்தனவென்றும், ஆன்மீக முன்னேற்றமும் கடைத்தேற்றமுமாகிய உண்மையான பணிக்குத் தொடர்பற்றவை என்றும் கூறுகின்றது.

இதன் தொடர்பாக சுவாமி விவேகானந்தர் கூறியிருப்பதாவது; ‘இயற்கையை விஞ்சியவர்கள் என்ற கருத்து மனிதனில் ஓரளவுக்கு செயலாற்றலைத் தூண்டிவிடலாம். ஆனால், அது அடிமைத் தனத்தையும், அச்சத்தையும், மூடநம்பிக்கையையும் கொணர்கிறது. அது மனிதனின் இயல்பான பலவீனத்தின் மீதான வெறுக்கத்தக்க நம்பிக்கையாக இழிவுபடுகிறது’ என்பதாகும்.

பௌத்தத்தின் அறிவியல் மனப்பான்மையும், உள்ளடக்கமும் ஆர்பர் ஐன்ஸ்டீனை 'நவீன அறிவியலின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாக ஏதேனுமொரு மதம் இருக்குமானால், அது புத்த மதமே' என்று கூற வைத்துள்ளது.

## ஒழுக்கமும், சமூகமும்

ஒரு உலக சமயம் என்ற முறையில் பௌத்தத்தின் மற்றொரு முக்கியமான அம்சம், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளின் மீதுள்ள அதன் கோட்பாடாகும். ஒரு கோயிலுக்குள்ளோ அலலது குகைக்குள்ளோ அல்லது காட்டுக்குள்ளோ சென்று சமுதாயத்திலிருந்து பிரிந்து வாழும் வகையில், சுறுசுறுப்பான வாழ்க்கையிலிருந்து தப்பியோடுதல் அல்லது பின்வாங்குதலே இது என்று விபரமறியாத மக்கள் இச்சமயத்தைப் பற்றிக் கருதும் பொதுவான போக்கைக் கொண்டிருக்கின்றனர். எனினும், இது விளக்கமில்லாத காரணத்தினால் உண்டானதாகும். ஏனெனில், புத்தரே இவ்வுலகில் வாழ்ந்த கடுமையான உழைப்பாளிகளுள் ஒருவராவார். அவர் இந்தியாவின் குறுக்கும் நெடுக்குமாக நடந்தே சென்று, எல்லாத் தரத்து மக்களையும் சந்தித்துப் பேசி, அவர்களுக்கு போதனையும் செய்தார். அவர் எப்பொழுதும், தாம் சந்தித்த எல்லோருடனும் நிர்பாணத்தைப் பற்றி மட்டுமே பேசவில்லை. அவர் அவரவர்களது வாழ்க்கை முறைக்கும், விளக்கநிலைகளுக்கும் ஏற்றவாறே பேசினார். தொடக்க நிலையிலுள்ள ஒருவர் உடனடியாக மிக உயர்ந்த மேன்மையான உண்மையை உணர்ந்து கொள்வாரென தாம் எதிர்பார்க்கவில்லை என்றே புத்தர் கூறியுள்ளார். தமது வழி படிப்படியான ஒன்று என்று அவர் கூறினார். ஆகவே, அவரவர்களது தராதரத்திற்கும், முதிர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்ப வெவ்வேறு வழிகளில் மக்களுக்கு உதவுவது இச்சமயத்தில் ஒரு பகுதியாகும். துடிப்பான சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையை உண்மையான சமய வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாது.

புத்தரது சமயத்தில் விரிவானதொரு ஒழுக்கவியல் முறையும் (system of ethics), விழுமியதோர் உளவியல் தழுவிய

சூழ்நிலை சார்ந்த இயல்கடந்த இயற்பியலும் (metaphysics) காணப்படுகிறது. அது எல்லா சுபாவத்தினருக்கும் நிறைவளிப்பதாக உள்ளது. எளிமையான மனத்தினருக்கு, அது ஓர் ஒழுக்கவியல் நெறி முறையினையும் (code of ethics), ஒரு பகட்டான வழிபாட்டையும், சொர்க்க வாழ்க்கைக்கான ஒரு நம்பிக்கையையும் கூட வழங்குகிறது. ஆர்வமுனைப்புள்ள அடியார்களுக்கு, தூய சிந்தனைகளின் ஒரு தொகுப்பையும், மெய்யொளிப்பேற்றிற்கும் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுவதற்கும் இட்டுச் செல்லுகின்ற ஓர் உயர்ந்த தத்துவத்தையும், ஒழுக்க போதனையையும் வழங்குகிறது. ஆனால், மனிதன் தன்னைத் தானே தூய்மைப் படுத்திக் கொள்வதே அடிப்படைக் கோட்பாடாகும். தூய்மையும், பரிவிரக்கமும் வாய்ந்த வாழ்க்கை நடத்தாத ஒருவருக்கு ஆன்மீக முன்னேற்றம் நடக்காத ஒன்று. பல்வேறு பழக்கவழக்கங்களும், பாரம்பரியங்களும் இணைந்த பற்பல சடங்குகள், ஊர்வலங்கள், விழாக்களைக் கொண்டதும், பெருந்திரளான மக்களால் விரும்பி கடைப்பிடிக்கப்படுவதுமான பௌத்த சமயம், அதன் ஒருங்கமைக்கப் பட்ட வடிவில் ஏராளமான ஊக்குவிப்புக்களையும், அனுபவங்களையும், கல்விக்கான பாடப்பொருட்களையும் வழங்குகிறது. குடும்ப நிகழ்ச்சிகள், கிராமியச் சடங்குகள், கலை நிகழ்ச்சிகள், பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் நினைவுநாள் நிகழ்ச்சிகள் ஆகியன ஒரு முறைசாரா வழியில் கல்வியை வழங்குகின்றன. குழந்தைகள் தங்களுடைய பெரும்பாலான பழக்கங்களையும், நடத்தைப் பாங்குகளையும், பண்பாட்டு மதிப்பீடுகளையும் மற்றும் தங்கள் இலட்சியங்களையும் கூட இந்த முறைசாராக் கல்வி நடவடிக்கைகளில் உற்று நோக்கியோ, பங்கேற்றோ கற்றுக் கொள்கின்றனர். இளைஞர்களும், பெரியவர்களும் கூட இவற்றால் பயனடைகின்றனர்.

தனிப்பட்ட நிலைக்கும், தனிமனிதனின் வீடுபேற்றிற்கும் அப்பால், சமூகம் மற்றும் நாட்டின் ஒரு அலகாக, குடும்பத்தை புத்த மதம் அங்கீகரிக்கிறது. இவ்வாறாக, இங்கே இப்பொழுதே பொருளியல் நிறைவை அடைவதையும், இதற்குப் பிறகு

சொர்க்கத்துக்குப் போவதையுமே தம் மிக உயர்ந்த லட்சியமாகக் கொண்டுள்ள சாதாரண இல்லறத்தாருக்கு பௌத்தம் ஓர் எளிய ஒழுக்க விதிமுறைகளை வழங்குகிறது. 'சிகாலோவாத சூத்திரத்தில்' அடங்கியுள்ள இதனைக் கடைப்பிடிப்பது சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவதாகும். அது குடும்ப உறுப்பினர்கள், முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இடையில் சரியான உறவுமுறைகளைப் பராமரிப்பதாகும்.

புத்தர் மற்றொரு பேருரையில், பெற்றோர்கள், குழந்தைகள் இல்லத் தலைவர்கள், இல்லத் தலைவியர், சுற்றத்தார், மூத்தவர்கள், மறைந்தவர்கள் மற்றும் தேவர்கள் ஆகியோருக்கு மதிப்பளிக்கவும், அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றவும், சமூகத்தில் பொது மக்களுக்கு தொல்லையாக இல்லாது இசைவோடு வாழவும், குற்றமற்ற வாழ்க்கை நடத்தவும் பத்து வகையான அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

அத்தகையதொரு போதனை சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் நலனையும் இலக்காகக் கொண்டிருப்பதுடன், ஓர் உண்மையான சமூக ஜீவியின் சின்னமாக இருக்கும் நட்பார்ந்த செயல்பாடுகளை ஊக்கத்தோடு கடைப்பிடிக்கவும் வகை செய்கிறது. மற்றொரு புறம், (வேட்கைகளால் மாசடைந்த ஒரு மார்க்கமான) இல்வாழ்க்கையில் உள்ள இடர்ப்பாடுகளை உணர்ந்த முன்னேற்றமடைந்த ஒருவர் 'விநயம்' எனப்படும் திருச்சங்க மரபின் (holy orders) விதிமுறைகள் அடங்கியுள்ள, மேலும் உயர்வான ஒழுக்கவியல் மற்றும் நீதிநெறி விதிமுறைகளை (code of morals and ethics) நாடலாம். அவை உலகியல் கவனச் சிதைவுகளால் தடைபடாத, தூய்மையும் புனிதமும் உடைய துறவு வாழ்க்கையை அவர் நடத்துவதற்கு இயல்விக்கும்.

**ஒழுக்கம்**

பௌத்த சமயம் ஒழுக்கம் சுதந்திரத்தையும், விளக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும். சமூகத்தின்

தற்காப்புத் (self preservation) தேவையிலிருந்தே ஒழுக்க விதிகள் வளர்ச்சி யடைந்தனவாதலால், அது மாறிக் கொண்டிருக்கும் காலங் களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்பதாகவமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஆகவே, ஒழுக்கவிதிகள் என்பன சார்புநிலை கொண்டனவேயாகும். உண்மையில், வற்புறுத்த லையோ, தனிநபருக்கு வெளியே உள்ள எத்தகைய காரணிகளின் தலையீட்டினையோ ஆதாரமாகக் கொண்டு, எவ்வித ஒழுக்கம் பற்றிய கருத்தாக்கமோ, நீதிநெறி பற்றிய கருத்தாக்கமோ இருக்க முடியாது. ஒழுக்கம் உண்மையாகவே பயனுடையதாக இருக்க வேண்டுமானால், தனிநபரானவர் தன் மீது சுமத்தப்படும் கட்டுப்பாடு எதற்கும் சுதந்திரமாகவே இசைவளிக்க வேண்டும்.

பௌத்தத்தின் எல்லா ஒழுக்க நடத்தைக்கும், நீதிநெறி நடத்தைக்கும் பரிவிரக்கம் மிக்க அன்பே அடிப்படையாகிறது. இந்தப் பரிவிரக்கத்திலிருந்தே எல்லா நீதிநெறி விதிகளும், ஒழுக்க விதிகளும், சமூக சேவையும், சமூக நீதியும், சமூக நலமும் உதிக்கின்றன. சமத்துவம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, பிற உயிர்களை மதித்தல், பிறர் கருத்தை மதித்தல், பிறர் சமயத்தை மதித்தல் ஆகிய இவை யாவுமே பரிவிரக்கம் மிக்க அன்பில் வேர்கொண்டனவாகும்.

இம் மகத்தான, மேன்மைவாய்ந்த கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு, பௌத்தம் எப்பொழுதும் ஓர் அமைதி சமயமாக இருந்து வந்துள்ளது. இதன் நீண்ட வரலாறு சமய போர்கள், சமய அடக்குமுறைகள் மற்றும் விசாரணைகள் ஆகிய கறைகள் படியாததாகும். இந்த வகையில் பௌத்தம் சமயங்களின் வரலாற்றில் தனிச்சிறப்புடையதாக திகழ்கிறது. இது பற்றி புத்தரின் மேன்மையான முன்மாதிரியைக் குறித்து சுவாமி விவேகானந்தர் தமது கர்மயோக சொற்பொழிவுகளில் கூறுவது: 'மனித இனம் முழுவதுமே உண்டாகியது அத்தகய மனிதர் ஒருவரையே, அத்தகைய தத்துவம் ஒன்றையே, அத்தகைய விரிந்த பரிவன்பு ஒன்றையே. அதியுன்னத தத்துவத்தைப் போதிக்கும் மகத்தான தத்துவமேதை; ஆயினும்,

ஆகக் கீழ்நிலை விலங்கினிடமும் மிக ஆழ்ந்த பரிவுணர்வு; அத்துடன், ஒருபோதும் தமக்காக எதையும் உரிமை கோரிக் கொள்வதில்லை. முற்றிலும் உள்நோக்கம் இன்றிச் செயலாற்றிய புத்தரே தலைசிறந்த கர்மயோகி. மனிதராகப் பிறந்தவர்களிலேயே மகத்தானவர், ஒப்பற்றவர், எக்காலத்து வாழ்ந்தோரிலும் மிகவும், மேன்மை வாய்ந்த அன்பு, அறிவுக் கலவை என்றார்.

பௌத்தத்தின் சமூகவியல் மற்றும் ஒழுக்கவியல் விதிமுறைகள் (code) குறித்து ஜெர்மானிய தத்துவமேதை பேராசிரியர் மாக்ஸ் முல்லர் கூறுகின்றார்; 'பௌத்தத்தின் ஒழுக்க விதிமுறைகளை மட்டுமே எடுத்துக் கொண்டாலும், அது உலகம் என்றென்றும் அறிந்த மிகவும் முழு நிறைவானவற்றுள் ஒன்றாகும்.'

இந்த ஒரு கருத்தில் பகைமையும், நட்பும், பாராட்டும் இரு சார்பிலிருந்தும் வந்த எல்லாச் சான்றுகளுமே ஒத்திருக்கின்றன. தத்துவமேதைகள் இருந்திருக்கலாம்; சமய போதகர்கள் இருந்திருக்கலாம்; நுட்பமான இயல்கடந்த இயற்பியல்வாதிகள், வாதவிற்பன்னர்கள் இருந்திருக்கலாம். ஆனால், அத்தகைய அன்பின் அவதாரத்தை இன, மத, நிற பாகுபாடறியாத அன்பை, மனித இனத்தின் எல்லையையும் தாண்டிப் பெருக்கெடுத்தோடிய அன்பை, தன் வீச்சில் அறிவார்ந்த உயிர்கள் அனைத்தையும் ஒருங்கே தழுவிய அன்பை, அகிலம் தழுவிய (மெத்தா) பேரன்பையும், அஹிம்சையையும் நற்செய்தியாக உருவமைத்த அந்த அன்பை நாம் எங்கே காண முடியும்?

ஆர்பர்ட் சுவைசர் கூறுகிறார்; "பூமியில் என்றென்றும் மதிப்புமிக்க வாய்மைக்கு சொல்லுருவமளித்து, இந்தியாவுக்கு மட்டுமே அன்றி, மனித குலத்துக்கே உரித்தான ஒழுக்கவியலை முன்வைத்தவர் புத்தராவார். உலகிற்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய ஒழுக்கவியல் மேதைகளில் புத்தர் ஒருவராவார்."

பேராசிரியர் ரைஸ்டேவிஸ் கூறுகிறார், "எந்தவொரு ஒழுக்க வியல் கல்வியிலும் பௌத்தம் பற்றிய படிப்பு ஓர்

இன்றியமையாத பகுதியாகக் கருதப்பட வேண்டும் என்றும், ஓரிரண்டு பக்கங்களில் முடித்துக் கொள்ளாமல், ஒழுக்கவியல் மதிப்பீடு பற்றிய வரலாற்று நோக்கில் அது தனக்குரிய சரியான அங்கீகாரத்தைப் பெற வேண்டும்'' என்றும் கருதுகிறார்.

## பொருளாதார மேம்பாடு

பௌத்த சமய கூட்டமைப்பினுள் பொருளாதார மேம்பாட்டுக்கு உயர் சக்தி மிக்க பொருளமைந்த வழிமுறைகள் கூறப்படுகிறது. பௌத்த சமய கட்டமைப்பினுள்ளாக, ஓர் சக்தி வாய்ந்ததும் (dynamic) பொருள் பொதிந்ததுமான அடிப்படை கொண்ட பொருளாதார வளர்ச்சியின் வாய்ப்புக்கூறு, பௌத்தம் தற்சமயம் மிகவும் வளம்கண்ட நாடுகளிலும், வளர்ந்துவரும் நாடுகளிலும் பெரிதும் கவனத்தை ஈர்த்து வருகிறது. புதிய மேம்பாட்டுக் கோட்பாடுகள், மிகுந்துவரும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுடன் போராடி வெற்றிகாணத் தவறிவிட்ட இக்கட்டான நிலையிலிருந்து வெளிப்பட பௌத்தம் ஒரு உன்னத வழியைத் தருகிறது.

தீக நிகாயத்தில் உள்ள 'சக்கவத்தி சிஹநாத சூத்திரம்' குற்றங்களுக்கும், ஒழுக்கமின்மைக்கும் வறுமையே காரணம் என்று தெளிவாகக் கூறுகிறது. மக்களின் நல்வாழ்வு மற்றும் மகிழ்ச்சியின் பொருட்டாக பொருளீட்டுவதன் மதிப்பையும், பொருளாதார மேம்பாட்டின் முக்கியத்துவத்தையும் புத்தரும், அவரது மாணாக்கரும் மக்களுக்கு எடுத்துரைத்தனர். தீக நிகாயத்தில் உள்ள 'கூட தண்ட சூத்திரத்தில்' தண்டனை மூலமாக திருடுதல் போன்ற குற்றங்களைத் தடுக்க முடியாது என்றும் புத்தர் எடுத்துரைத்துள்ளார். அத்தகைய குற்றங்களை, போதுமான அளவிலும் முறையான வகையிலும், கட்டுப்படுத்தவும் தடுக்கவும், மக்கள் வசதியாக வாழ்க்கை நடத்த இயல்விக்கும் வகையில் தங்கள் பணிகளில் மகிழ்ச்சியாக ஈடுபட்டிருக்க வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும் என்று கூறப்படுகிறது.

பொருளாதாரப் பாதுகாப்பு (அத்தி சுகம்)

செல்வத்தை அனுபவித்தல் (போக சுகம்)

கடன்கள் இல்லாமை (அனன சுகம்)

குற்றமற்ற வாழ்க்கை (அனவஜ்ஜ சுகம்)

இவை சாதாரண மனிதருக்கான நால்வகை மகிழ்ச்சிகளாகும்.

ஒருவரது பணியில் உள்ள திறமை (உட்டான சம்பதா), செல்வத்தின் பாதுகாப்பு (ஆரக்க சம்பதா), நல்ல நண்பர்களுடன் உறவு (கல்யாண மித்ததா), வரவுக்குத் தகுந்த செலவு (சம ஜீவிகதா) ஆகிய நான்கும் இவ்வுலகில் மக்களின் நல்வாழ்வுக்கு ஆதாரமாகும்.

சிகாலோவாத, பராபவ, வசல சுத்தம் போன்ற பேருரைகளில் சமுதாய முன்னேற்றத்திற்கான பல கருத்துக்களோடு, குடும்பம் மற்றும் சமூகத்தின் பரஸ்பர நலனுக்கான கடமைகளும், கடப்பாடுகளும் போதிக்கப்படுகின்றன.

மக்களுக்கு தீங்கிழைக்காததும், புண்படுத்தாததுமான ஒரு நேர்மையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு கருணையால், கடுமையான அரசியல் பிரச்சினையை நோக்கிக் கூட புத்தர் தம் நடைமுறை சார்ந்த அறிவுரைகளை தம்மபதத்தின் உரையிலிருந்து கண்கூடாக விளக்கியுள்ளார். நேர்மையற்ற மன்னர்களினால் செலுத்தப்படும் கொடுங்கோல் ஆட்சியினாலும் வரி பளுவினாலும் மக்கள் துன்புறுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

'தச ராஜ தம்மம்' எனும் அரச கடமைகள் நேர்மையாக ஒரு நாடு ஆளப்பட வேண்டுமென்று புத்தர் பத்து நன்னெறி கோட்பாடுகளை போதித்துள்ளார்.

அவையாவன:

1. ஈகை
2. ஒழுக்கம்
3. தியாகம்
4. இரக்கம்
5. நன்னடத்தை
6. வெறுப்பின்மை
7. தடுத்தல் செய்யாமை
8. அகிம்சை
9. பொறையுடைமை
10. நட்புடைமை

ஆகியவை அரசுக்குரிய பத்து நெறிகளாக போதிக்கிறார்.

**அஹிம்சை**

பொறுமை, மன்னிப்பு, சகிப்பு, மற்றும் புரிந்துணர்வு (கந்தி) எதிர்க்காமை, தடுக்காமை, அதாவது மக்களின் நல்வாழ்வு மேம்பாட்டை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை தடை செய்யாமை (அவிரோதம்).

இவ்வாறாக, புத்தரும், அவரது மாணவர்களும் ஆரோக்கியம், சுகாதாரம், பொருளீட்டல், பரஸ்பர உறவு, சமூக நல்வாழ்வு மற்றும் நேர்மையான அரசு ஆகியன பற்றிய அனைத்துமே மக்கள் நலனுக்கான இன்றியமையா கருத்துக் களைப் போதித்துள்ளனர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் தியாசொ.ஃபிக்கல் சொசைட்டியின் தலைவராக இருந்த எச்.பி.பிளவட்ஸ்கி அம்மையார் கூறியதாவது: "உயர்ந்தோங்கிய ஒழுக்க

நெறிகளை முதன் முதலாக பொது மக்களுக்கான தம் போதனைகளில் உள்ளடக்கி அவற்றைத் தமது பொது அமைப்புமுறையின் (**public systems**) ஆதாரமாகவும், சாரமாகவும் ஆக்கியவர் புத்தரே ஆவார். பொதுநிலை (exoteric) பௌத்தத்திற்கும், பிற அனைத்து மதங்களுக்கும் உள்ள பெருத்த வேறுபாடு இங்கே தான் இருக்கிறது. ஏனென்றால், பிற மதங்களில் சடங்குகளும், கோட்பாடுகளும் முதலிடத்தையும், மிக முக்கியமான இடத்தையும் பிடித்துக் கொண்டிருக்க, பௌத்தத்தில் ஒழுக்கநெறிகள் தான் மிகவும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளன."

**அரசு**

இன்றைய பாராளுமன்ற முறை கூட, பௌத்த சமயத்தில் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளுடன் வலுவான ஒப்புமை உடையதாக இருக்கிறது. இந்தியாவில் முன்னாள் வைசிராயாக இருந்த, செடலாந்தின் மார்க்க 'பிரபு' போன்ற அரசுமுறைப் பட்டம் வெளிப்படுத்தியிருப்பதாவது; "பிரதிநிதித்துவ அடிப்படை யிலான சுய ஆட்சி நிறுவனங்களில், தொடக்கால எடுத்துக் காட்டுகளின் நடவடிக்கைகள் எந்த முறையில் நடத்தப்பட்டன என்பது பற்றிய விவரங்களுக்கு நாம் நாட வேண்டியது பௌத்த சமய நூல்களைத் தான். மேலும், 2500 ஆண்டுகளும், அதற்கு மேலும் முந்திய பௌத்த சங்கங்களில் நம்முடைய இன்றைய நாள் பாராளுமன்ற நடைமுறைகளின் அடிப்படைக் கூறுகள் காணப்படுவதை அறிய பலரும் வியப்படையக்கூடும்." மன்றத்தின் கண்ணியத்தைப் பராமரிக்க நியமிக்கப்பட்டவர் ஒரு சிறப்பு அதிகாரி (Special Officer) இவரே நம்முடைய பொதுச் சபையின் சபாநாயகரது (அவைத் தலைவரது) கரு வடிவம் (embryo of Mr.Speaker) அவசியம் நேரும் போது (quorum) குறைந்தபட்ச கூட்டம் சேர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட இரண்டாவது அதிகாரி இவரே நமது இன்றைய முறையிலுள்ள பாராளுமன்ற தலைமைக் கொரடாவின் (Parliamentary Chief Whip) முன்னோடி. அலுவலகத் துவக்கி வைக்கும் ஓர் உறுப்பினர் அதை ஒரு தீர்மான வடிவில் முன்வைக்க, அது விவாதிக்கப்படுகிறது. சில சமயங்களில் இது ஒருமுறை

மட்டுமாகவும், பிற சமயங்களில் மும்முறையும் நடைபெற்றது. நாடாளுமன்றத்தில் சட்ட முன் வடிவுகள் சட்டமாகும் முன் மூன்றாம் முறை வாசிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் நடைமுறையை எதிர் நோக்கியதாற் போலும், விவாதத்தில் கருத்து வேறுபாடு இருப்பது தெரியவந்தால், அது பற்றி வாக்கெடுப்பு மூலம் பெரும்பான்மை யைக் கொண்டு முடிவெடுக்கப்பட்டது. வாக்கெடுப்பு ரகசிய மானதாக இருந்தது."

**மகிழ்ச்சி**

இது மக்கள் பின்பற்றுவதற்காக மட்டும் உள்ள ஒரு சமயம் அன்று; அனுபவத்தையும், இன்பத்தையும் அடையும் பொருட்டு கற்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், நடைமுறை செய்வதற்கும் உரிய ஒரு சமயமேயாகும்.

ஒரு நாள் புத்தர் காட்டில் நடந்து சென்றுகொண்டிருந்த போது, அவர் ஒரு கைப்பிடி இலைகளை எடுத்துக் கொண்டு, தாம் போதித்திருப்பவை தம் கைக்குள் உள்ள கைப்பிடி இலைகளைப் போன்றனவாகும் என்று அறிவித்தார். தம்மம் அதன் முழுமையான அளவில் காடு முழுவதும் உள்ள எல்லா இலைகளையும் போலாகும். தம்மம் கற்பனைக்கெட்டாத அளவு எவ்வளவோ விரிவானது. ஆகவே, புத்தர் துன்பத்திற்கு முடிவு கட்டுவதும் விடுதலை பெறுவதுமாகிய உடனடி தேவைக்கான இன்றியமையாதவற்றை மட்டுமே போதித்தார். துக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வது எப்படி என்பதை புத்தர் தமக்கு எடுத்துரைத்தார். மற்ற உலகியல் அறிவெல்லாம் முக்கியமல்ல. அறியாமையின் காரணமாக துன்பங்கள், தொல்லைகள், மனக்குறைகள், போராட்டங்கள் ஆகியவற்றுக்கு ஈடுகொடுக்கும் முயற்சியிலேயே நாம் வாழ்நாள் முழுவதையும் செலவிடுகிறோம். இதற்குக் காரணம், வாழ்க்கையின் உண்மையான இயல்பையும், துக்கத்தின் காரணங்களையும் நாம் விளங்கி கொள்ளாததேயாகும். எடுத்துக்காட்டாக, நிலையாமை (அனிச்ச), துன்பம் (துக்கா) மற்றும் பொருளின்மை (அனத்தா) எனும் இம் மூன்று பண்புகளை எடுத்துக் கொள்வோம். இப் பிரபஞ்சம் முழுவதுமே இப் பண்புகளைப்

பெற்றுள்ளது. நாம் பிறந்த அந்தக் கணம் முதல் இருந்துவரும் மாற்றம் எனும் செயல்முறையை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது; துக்கத்தின் காரணம் அங்கே தான் இருக்கிறது. துக்கம் பற்றிய அடிப்படைப் பிரச்சனைகளைப் பற்றி நம்மை நம்ப வைக்கும் நமக்கு இதற்கு மேல் எதுவும் தேவை யில்லை.

வாழ்க்கையிலிருந்து நமக்கு வேண்டியது என்ன? நாம் மகிழ்ச்சியடைவது எப்படி? எல்லாப் பொருட்களும் மாறுதலுக்குரிய அழிவுக்கு உட்படுவனவே என்பதை நாம் உணர்ந்து கொள்ளாததன் விளைவே துன்பமும், அதனைத் தொடர்ந்து வரும் மகிழ்வின்மையும். இது உலகளாவிய விதி. ஆனால், நம்முடைய அறியாமையின் காரணமாகவும், ஒரு ஆன்மா பற்றிய தவறான நம்பிக்கையாலும் நாம் என்றுமே மாற்றமில்லாத ஒரு நிலையில் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டே இருக்க விரும்பு கிறோம். இது ஒருபோதும் நடக்க முடியாது. நாம் நம்முடைய செல்வத்தையும், நம்முடைய உடமைகளையும், நம்முடைய உடல் நலத்தையும், நம்முடைய இளமையையும் தக்க வைத்துக்கொள்ளவே விரும்புகிறோம். ஆனால், ஒரு நாள் இவை எல்லாமே காற்றினால் அணைந்துவிடும். மெழுகின் தீப்பிழம்பு போல அடித்துச் செல்லப்படும். நம்முடைய அழகிய தோற்றங்கள் நரைதிரைகளால் மாற்றமடையும் போது நாம் கவலைக் குள்ளாகிறோம்; மகிழ்ச்சியற்றுப் போகிறோம்; ஏனென்றால் பொருட்களின் மாறிக்கொண்டிருக்கும் இயல்பை நாம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம்.

இவை பற்றி ஆழ்ந்து சிந்தித்து, நம்முடைய துன்பத்தின் காரணத்தை விளங்கிக் கொள்ளுமாறும் அகற்றுமாறும் புத்தர் போதிக்கிறார். மூடநம்பிக்கைகளாலும், விருப்புவெறுப்புக்களாலும் விழியிழந்த ஒரு உலகிலிருந்து ஒளியும், அன்பும், இன்பமும் கண்ணியமும் வாய்ந்த ஒரு புதிய உலகைச் சென்றடையும் வழியை புத்தருடைய போதனைகள் ஒளிரச் செய்துள்ளன. ‘ஆசிய ஜோதி’ எனும் கவிதையில், சர் எட்வின் அர்னால்டு புத்தரை இவ்வாறு வருணிக்கிறார்:

*"......... மானிடத் தருவில்*

*ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்*

*ஒரு முறை மலரும் ஒண்மலர் இதுவாம்.*

*மலரிதன் மணமே அறிவின் மணமாய்,*

*மலரிதன் மதுவே அன்பின் மதுவாய்*

*மன்னுல கெங்கும் நிறைந்திடு மன்றே.*

*மனத்தின் மாசு மாற்றிடும் -*

*மலரிதன் மதுவே அருளின் மதுவாய்*

*மன்னுயிர்க் கின்பம் வளர்த்திடும் -*

*நிலயாமையும் மரணமும்"*

நம் இளமை பருவத்தில், நாம் இளமையோடிருந்த போதிலும், காலப் போக்கில் நாம் முதுமை அடைவோம் என்பதைக் கட்டாயம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் உடல் நலத்தோடு இருக்கும் போது, நாம் காலப்போக்கில் நோய்வாய்ப்படலாம் என்று கட்டாயம் எண்ணிப்பார்க்க வேண்டும். அழிவுக்கும், முழுமைக்கும், நோய்க்கும், இறுதியில் மரணத்திற்கும் நாம் நம்மை நாமே மதிநலத்தோடு ஆயத்தப்படுத்திக் கொண்டால், அதைத் தாங்கிக் கொள்வது அவ்வளவு கடினமாக இராது. இவை ஒவ்வொருவரும் எதிர்கொண்டாக வேண்டிய உலகியல் நிலைமைகள் என்பதை விளங்கிக் கொண்டால், நாம் எவ்விதத் துன்பத்தையும் மன உறுதியோடு தாங்கிக் கொள்ள முடியும. இதுவே புத்தர் கூறும் வலிமையான புகலிடமும் ஆகும். இடர்ப்பாடு எதிர்ப்படும் போது குறைபட்டுக் கொள்வோரும், அழுகின்றவர்களும் இருக்கின்றனர். இது விளக்கமில்லாமையே அன்றி, வேறல்ல. அதைப் பற்றிப் புலமிபிக் கொண்டிருந்தால், அது துன்பத்தைத் துரத்திவிடாது.

இன்னல்களால் வரும் வேதனையைத் தவிர்க்க வேண்டுமானால், நாம் நமது மனங்களை விளக்கத்தின் மூலம் வலுப்படுத்த வேண்டும்.

'முடிவுக்கு வருதல்' எனும் இயற்கையின் செயல் முறையிலிருந்து தப்பக்கூடிய யாரும் அல்லது எதுவும் உண்டானதே இல்லை. ஒரு முடிவு இருந்து தான் தீர வேண்டும். இல்லாவிட்டால், எதுவுமே இருக்க முடியாது. இந்த முற்றிலும் இயற்கையான நிகழ்ச்சி (phenomenon) குறித்து நாம் அஞ்ச வேண்டுவதில்லை. மரணத்தின் போது கூட அது வாழ்க்கையின் முடிவல்ல என்றும், மற்றொன்றின் துவக்கமே என்றும் நாம் யாவரும் கருதிக் கொள்ளலாம். கவிஞர் வொர்ட்ஸ்வோர்த் வாயிலாக நாம் அறிந்து கொள்வது:

*"நம்மோடு உதிக்கின்ற அந்த (ஜீவன்)*

*நம்வாழ்வாம் வானத்து விண்மீ னாகும்;*

*எங்கோயோ மறைவுண்ட அதுவே மீண்டும்*

*இங்குற்ற தெனலாகும் தொலைவி னின்றே"*

என்பதாகும். நாம் இந்த உலகிலிருந்து பருவுடலளவில் மறைந்து போகும் போது, அந்த உயிர் வேறெங்கோ தோன்றத்தான் செய்கிறது. எனவே, கவலைப்படுவானேன்? சம்சாரத்தில் பயணம் செய்ய நமக்கு ஒரு புதிய பாஸ்போர்ட் சும்மா கிடைக்கிறதல்லவா?

நாடுகள் உருவாகும் மடியும்; பேரரசுகள் உதிக்கும் உதிர்ந்துவிழும்; மாபெரும் அரண்மனைகள் கட்டப்படும்; நொருங்கி விழுந்து மண்ணாகும். உலகத்தின் போக்கு அத்தகையதே. அழகிய மலர்கள் மலர்ந்து போவோர் வருவோரை ஈர்க்கும், மறு நாளே வாடி வதங்கி உலரும். அவற்றின் இதழ்கள் ஒவ்வொன்றாய் உதிர, விரைவிலேயே முற்றிலும் மறக்கப்படும். உலகின் எல்லாச் சுகபோகங்களும், உயர்ந்த சாதனைகளும் ஒரு கணநேரக் காட்சிதான். அவற்றில்

மகிழ்ச்சி காண்பவர், அவற்றை இழுக்கும் போது புலம்பி அழுகத்தான் வேண்டும். இவ்வுலகில் எதுவுமே நீடித்திராது என்பதால், இதிலிருந்து (ultimate happiness) பேரின்பத்தை பெறமுடியுமென யாரும் நம்ப வேண்டாம். இவ்வுலகின் நிலையற்ற தன்மையையும், இருந்துவரும் அனைத்து உலகியல் தோற்றங்களிலும் உள்ளடங்கியுள்ள பல்வேறு வடிவான நிறைவின்மையையும் சிந்தித்துப் பார்க்குமாறு புத்தர் அறிவுறுத்துகிறார்.

இவ்வுலகம், சூரியன், சந்திரன், விண்மீன்களின் கூட்டங்கள் மற்றும் இப் பிரபஞ்சம் அனைத்துமே அதே மாற்ற முடியாத நிலையாமை விதிக்கு உட்பட்டவையேயாகும்.

நாம் புத்தருடைய போதனைகளைப் பின்பற்றுவோமானால், நம் அன்பிற்குரியவர்களையும், சொத்துக்களையும், செல்வத்தையும் விட்டுப்பிரிய நேரும் வாய்ப்பால் நம் நிலைகுலைந்து போக மாட்டோம். இதனால் பவுத்தர்கள் உலகியல் சுகங்களை அனுவிக்கவே கூடாது என்று பொருளாகாது. நாம் நடுநிலைப் பாதையை (middle path) பின்பற்ற வேண்டும். நாம் இன்பங்களை மிதமான அளவுக்கு ஒழுக்கநெறிக் கோட்பாடுகளை மீறாமலும், அவற்றுக்கு அடிமையாகிவிடாமலும் அனுபவிக்கலாம். ஆனால், அது நம்முடைய ஆன்மீக முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கலாகாது என்ற விளக்கத்தோடுகூடியதாக இருக்க வேண்டும்.

இல்லத் தலைவர்களும், இல்லத் தலைவியரும், பெற்றோரும் பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் வலிமை வாய்ந்த பற்றுக்களை வளர்த்துக் கொள்கின்றனர். இது முற்றிலும் இயல்பானதே. ஓர் உலகியல் வாழ்க்கையை நடத்துவதற்கு இது அவர்களுக்கு இன்றியமையாததாகும். அதே நேரத்தில், இதே பற்றுத் தான் மாபெரும் துன்பத்துக்கும், துயரத்துக்கும் பிறப்பிடமாகும் என்ற உண்மையையும் நாம் எதிர்கொண்டாக வேண்டும். அது தற்கொலைக்குக் கூட இட்டுச் செல்லக்கூடும். பிரச்சினைகளை துடைத்தொழிக்க, நாம்

விளக்கத்தோடு கூடவே பற்றை வளர்வதற்கு அனுமதிக்க வேண்டும். ஒருவரது கடமை யாதெனில், என்றாவது ஒரு நாள் பிரிவு ஏற்படத்தான் செய்யும் என்று தெரிந்து கொண்டு பாசங்களை வளர்ப்பதாகும். அத்தகைய நிலைமையில், பிரிவு நேரும் போது எவ்வாறு சமாளிப்பதென்பது அவருக்குத் தெரியும். தனது மனதைப் பழக்கியிருக்கும் காரணத்தால், எளிதாகவே அவர் பைத்தியமாகாமலும், தற்கொலை செய்து கொள்ளாமலும் தவிர்த்துக் கொள்ளலாம்.

நம்முடைய பிரச்சினைகளெல்லாம் எப்படி உதிக்கின்றன என்பதையும், அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதையும், நாம் உணர்வதற்கு உதவி புரிந்து, நமக்கு ஆறுதல் அளித்ததே மனித இனத்திற்கு புத்தர் ஆற்றிய பங்காகும். வெளிச் சக்திகளை வழிபடுவது தற்காலிக தீர்வுகளுக்கு இட்டுச் சென்று, கணத்தில் மாறிவிடும் அமைதியை சில நொடிகளுக்கு வழங்கலாம். ஆனால், இது உங்களுக்குத் தலைவலி இருக்கும் போது இரண்டு வலி நிவாரணி மாத்திரைகளைப் போட்டுக் கொள்வது போலத்தான். மூன்று மணி நேரம் கழித்து அந்தத் தலைவலி திரும்ப வரும். ஏனென்றால், தலைவலி நோயல்ல; "நோய் தோன்றுகையில் அறிகுறிகள் தோன்றும், மருந்து உண்கையில் அறிகுறிகள் மறையும். அறியாமை தொடர்கையில் துன்பங்கள் இருக்கும் அறியாமை நீங்கிட துன்பமும் நீங்கும். சார்பு, "நிலைத் தோற்றுவாய் பத்தரது போதனைகள் நமக்கு அந்த விளக்கத்தைத் தருகின்றன."

## முடிவுரை

சமயம் சார்ந்த நெறிமுறைகளின் ஒரு முறைப்பாடு (system) என்ற வகையில், பௌத்தம் எவ்வாறு தனித்து நிற்கிறது என்பதை இந்த அறிமுகம் உங்களுக்குக் காட்டியிருக்குமென்று நான் நம்புகிறேன். புத்தர் ஒரு மாபெரும் பயனுறுதிவாய்ந்த ஆசிரியராகவும், மருத்துவராகவும் இருந்தவராவார். மக்களுக்கு நிலையாமையின் துக்கம் மற்றும் இயல்பை விளங்கிக் கொள்வது எப்படி என்பதையும் கற்பிப்பதே தமது நோக்கமாகும் என்பதை அவர் தம் மாணாக்கர்களுக்கு இடைவிடாது

நினைவூட்டி வந்தார். உள்ளுறுதியோடும், சரியான விளக்கத்தோடும், தமது மேன்மை மிக்க வழியைப் பின்பற்றுவோருக்கு இந்தப் பிறவியிலேயே இன்பம் உண்டு என்று அவர் கூறினார்.

இருந்துவரும் பல மதங்களில், அவற்றை பின்பற்றுவோருக்கு, பிற மதத்தலைவர்களை மதிக்குமாறு போதிக்கப்படுவதில்லை என்பது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலையாகும். அவர்கள் செய்வது ஒரு பாவமாவதோடு, அதனினும் மோசமாக, அதற்காக அவர்கள் நரகத்திற்கே போக நேரும் என்றும் எச்சரிக்கப்படு கிறார்கள். மரியாதை பெறத் தகுதியுள்ளவர்களுக்கு நாம் மரியாதை அளித்தாக வேண்டும் என்றும் புத்தர் கூறியுள்ளார். அவர்கள் கொண்டுள்ள சில சமய கண்ணோட்டங்களை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கூட, மனித இனத்திற்குச் சேவை புரிவதிலும், தாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் அவர்கள் உண்மையாகவும் இருப்பார்களானால், நாம் அதற்காக அவர் களுக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு சமயத்திலும் மேன்மை வாய்ந்த மக்கள் இருக்கின்றனர்.

"ஓ பிக்குகளே மக்களிடம் சென்று மதம் மாறச் சொல்லுங்கள்! இல்லாவிட்டால் நீங்கள் நரகத்துக்குப் போய்விடுவீர்கள்" என்று புத்தர் தமது மாணாக்கர்களுக்கு அறிவுறுத்தியதில்லை. எது சரி, எது தவறு, நல்லவர்களாக இருப்பது எப்படி, நன்மை செய்வது எப்படி என்பதை உலகுக்கு காட்டித் தருமாறும், தாம் போதித்த உண்மையை அவர்களாகவே வந்து பார்த்துக் கொள்ள ஊக்குவிக்குமாறுமே அவர் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

அவரும், அவரது மாணாக்கர்களும் பிற மதத்தினரை நித்திய நரகத்திற்குப் போகப் போகும் 'பாவிகள்' என்று கண்டனம் செய்வதில்லை. பௌத்தர்களுக்கிணங்க, சமயமே இல்லாதவர் களானாலும், கண்ணியத்தோடும் பரிவிரக்கத்தோடும் நல்லெண்ணத்தோடும் வாழ்வோர் 'சொர்க்கத்துக்குச் செல்ல' முடியும், அதாவது இன்பத்தை அனுபவிக்க முடியும்.

நாம் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் இருக்கும் போது 'சொர்க்கத்தில்' இருக்கிறோம். நாம் உடலளவிலோ உள்ளத் தளவிலோ துன்புறும் போது 'நரகத்தில்' இருக்கிறோம். இந்த நிலைகளில் யாதொன்றையும் அனுபவிக்க சாவுக்குக் காத்திருக்க வேண்டிய தேவையில்லை.

புத்த சமயம் தனித்தன்மை வாய்ந்த ஒன்று; ஏனென்றால், சொர்க்கத்தையோ, நரகத்தையோ குறித்துப் பேசாமலே கூட, நாம் சமயத்தைப் பற்றிப் பேச முடியும். மற்றவர்களால் இவ்வாறு பேச முடியாது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

'எல்லா உயிர்களிடத்தும் நல்லெண்ணமும், புரிந்துணர்வும்' என்ற பௌத்த சமயத்தின் போதனை ஓர் உலகப் பொது போதனையாகும். மனித வரலாற்றில் இதற்கு முன்பு என்றுமில்லாத அளவு, இந்த மேன்மைமிக்க போதனை இன்று உலகிற்கு மிகவும் தேவைப்படுகிறது.

பௌத்தம் ஒரு சமயம் என்ற வகையில், அது சக உயிர் களுடன் அமைதியோடும் நல்லிணக்கத்தோடும் வாழ்வதெப்படி என்பதை மனிதனுக்குக் காட்டி தரும் ஒளிமயமான உண்மையின் தனித்தன்மை வாய்ந்த விளக்கமாகும்.

*******************

# பௌத்தம்: ஒரு சமயம்
## BUDDHISM AS A RELIGION

**For free Distribution**

**இலவச வெளியீடு**